★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 18 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 1932 - 2022 தිනකරන්

வரு. 90 இல. 193 | Thursday 18, August, 2022 | 12பக்கங்கள் | 40/-







இந்த வார இறுதிக்குள்

## அவசரகால சட்டத்தை நீக்க முடியும்

### ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு



தற்போது அமுலிலுள்ள அவசரகாலச் சட்டத்தை இந்த வார இறுதிக்குள் நீக்க முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடு தற்போது ஸ்திரமான நிலையில் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லையெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் (16) நடைபெற்ற "தொழில்சார் வல்லுநர் சங்கங்களின் மாநாடு 2022" விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு

04

## இலங்கையில் முதலீடுகளை செய்ய கொரிய நாட்டவர்களுக்கு அதிக வாய்ப்பு

### பிரதமர் தினேஷ் குணவர்தன கொரிய தூதுவரிடம் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் மின் உற்பத்தி, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி உள்ளிட்ட உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்வதற்கு கொரிய முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்பு காணப்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும்

04

புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடைநீக்கம்:

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே தடை நீக்கப்பட்டது



### ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை மூலம் தெரிவிப்பு

புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் தடை நீக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகம் நேற்று விளக்கமளித்துள்ளது.

04

நாட்டில் கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும்

# மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு இந்த வார இறுதியில் தீர்வு

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளிப்பு



கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு இந்தவார இறுதியிலிருந்து தீர்வு கிடைக்குமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே பல்வேறு பாதிப்புக்களினாலும் பொருளாதாரத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், கடல்சார் உணவை பெற்றுக்கொள்ள முடியாதளவிற்கு விலை அதிகரித்து காணப்படுவது தொடர்பில் அமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்கு பதிலளித்த அமைச்சர்,

இந்தப் பிரச்சினை இருப்பது உண்மைதான். இந்த நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதனால்

04

**மண்ணெண்ணெய்யை தனியார் மூலமாகவும் இறக்குமதி செய்வது தொடர்பிலும் ஆராய்ந்து கலந்துரையாடி வருகிறோம்**

20 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான

## 9.5 kg தங்க பிஸ்கட்டுகளுடன் இரு பெண்கள் அதிரடியாக கைது

துபாயிலிருந்து நாடு திரும்புகையில் சுங்கத்தில் சிக்கினர்





துபாயிலிருந்து நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 20 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான 9.5 கிலோ எடைகொண்ட 80 தங்க பிஸ்கட்டுகள்

04



அரிசி கையிருப்பை அதிகரிக்க அரசு கவனம்:

## நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பம்

முதற்கட்டமாக 30,000 மெ.தொன் கொள்வனவு

03

போக்குவரத்து குறித்து எவ்வித முறைப்பாடும் இல்லை:

## டிசம்பர் மாதம் வரை விடுமுறை இல்லாது பாடசாலைகள் இயங்கும்

**வாரத்தில் 5 நாட்களும் நடத்த எதிர்பார்ப்பு**



பாடசாலைகளை டிசம்பர் மாத ஆரம்பம் வரையில் விடுமுறையின்றி வாராந்தம் 5 நாட்களும் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது

04

## பெருந்தோட்டதுறை மக்களுக்காக Online ஊடாக வைத்திய சேவைகள்

### செப். 01 முதல் ஆரம்பம் என்கிறார் அமைச்சர் பிரசன்ன



பெருந்தோட்டத்துறை மக்களுக்காக ஒன்லைன் முறையின் கீழ் வைத்திய சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள புதிய கிராமப்புற அபிவிருத்தி அதிகாரசபையினால் செப்டெம்பர் மாதம் 01 ஆம் திகதி பதுளை, இதழ் கஸ்ஹின்னவத்த கிராமத்தை மையமாகக் கொண்டு இந்த சேவை ஆரம்பிக்கப் படவுள்ளது.

04

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம்:

## TNA இனி தலையிடாதிருக்க உறவுகள் சங்கங்கள் வலியுறுத்து



காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஊக்குவிக்கப்படுகின்றனர் என்றும் இந்த விடயத்தை அரசியல் இலாபத்திற்காகவே கூட்டமைப்பினர்

04

## ஆய்வுக் கப்பலின் வருகை எந்த நாட்டையும் பாதிக்காது

### சீன வெளிவிவகார பேச்சாளர் தெரிவிப்பு



தமது உயர்தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கப்பலின் செயற்பாடுகள் எந்தவொரு நாட்டின் பாதுகாப்பையும் பாதிக்காது என்றும், எந்தவொரு மூன்றாம் தரப்பினரும் கப்பலின் வருகைக்கு தடையாக இருக்கக் கூடாது எனவும் சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின்

04

## இந்திய பெருங்கடலில் செல்வாக்கு செலுத்த சில நாடுகள் முயற்சி

– ஜெய்சங்கர்



பிராந்தியம் முக்கியத்துவம் பெறுவதால், சில நாடுகள் இந்திய பெருங்கடலில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிக்கின்றன என தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இலங்கைக்கு

04

## முன்னாள் ஜனாதிபதி 24இல் நாடு திரும்புவார்

### உதயங்க வீரதுங்க நேற்று தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக முன்னாள் ரஷ்யத் தூதுவர் உதயங்க வீரதுங்க நேற்று தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்து

04

## இலங்கை பெண்ணுக்கு வெளிநாட்டில் அதிஷ்டம்

### அபுதாபியில் 09 கோடி லொத்தர் பரிசு



கிளிநொச்சியிலிருந்து இந்தியாவின் தமிழ்நாட்டிற்குச் சென்று அகதியாகக் காலத்தைக் கழித்த பெண்ணொருவர் மிகப்பெரிய லொத்தர் பரிசு ஒன்றை வென்றுள்ளார்.

அபுதாபியில் நடைபெற்ற

04

## சர்வகட்சி ஆட்சிக்கு TPA ஒத்துழைக்க வேண்டும்

மலையக மக்கள் முன்னணி கோரிக்கை

02

சாரதி அனுமதி பத்திரம்; வாகன பரிமாற்றம்

## 13 வருடங்களின் பின்னர் கட்டணங்கள் மறுசீரமைப்பு

அனுமதி வழங்கியது அமைச்சரவை



03



## சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

இரு வாரங்களில் மட்டும் 17,000 பேர் வருகை

03

மிக் விமான கொள்வனவு மோசடி:

## உதயங்க வீரதுங்க CIDயில் வாக்குமூலம்




லோரன்ஸ் செல்வநாயகம்

மிக் விமான கொள்வனவு விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் ரஷ்யத் தூதுவர் உதயங்க வீரதுங்க நேற்று குற்றத்தடுப்பு

04

## இரு மாதங்களின் பின்னர் சுப்பர் டீசல் வருகிறது



ஒரு இலட்சம் மெற்றிக் தொன் சுப்பர் டீசல் மற்றும் டீசலை ஏற்றிய கப்பல் ஒன்று இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கை

04

## இலங்கைக்கு நிதியுதவி வழங்கிய பன்னீர்செல்வம்

குடும்பத்தின் சார்பில் 50 இலட்சம் வழங்கினார்



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் இலங்கை மக்களுக்கு 50 இலட்சம் (இந்திய) ரூபாய் நிதி உதவிக்கான காசோலையை தமிழக அரசிடம் வழங்கியுள்ளார்.

04

## ஒரு வார காலத்தில் 1590 டெங்கு நோயாளர் பதிவு

### சுகாதார பிரிவு கடும் எச்சரிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் ஒரு வார காலத்துக்குள் 1,590 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த நோயாளிகளுள் நூற்றுக்கு

04

## கொவிட் தொற்று நோயாளர் 10 மடங்காக அதிகரிப்பு

### Dr. ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

அண்மைக் காலங்களோடு ஒப்பிடுகையில் நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை பத்து மடங்காக

04




# அமைச்சு பதவிகளை ஏற்காது சர்வகட்சி ஆட்சிக்கு ஒத்துழைப்பு

## மலையக மக்கள் முன்னணி தீர்மானம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு பதவியை ஏற்காது வெளியில் இருந்து சர்வகட்சி ஆட்சிக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணி தீர்மானித்திருப்பதாகவும் இது தொடர்பான கடிதம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்பொழுது சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான கலந்துரையாடல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தற்பொழுது நாட்டில் எற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக அனைத்து மக்களும் பாரிய அளவில் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளார்கள்.

தற்பொழுது இருக்கின்ற பொருளாதார நிலையில் எந்தவிதமான அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது. மேலும் சர்வகட்சி அரசாங்கத்தில் குறைந்த அளவிலான அமைச்சர்களே நியமிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாட்டு மக்களும் போராட்டக்காரர்களும் விரும்புகின்றார்கள். சர்வதேசமும் அதனையே விரும்புகின்றது. எனவே அதற்கு வழிவிட்டு நாம் விட்டுக் கொடுப்புடன் ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ள வேண்டும்.

சர்வகட்சி அரசாங்கத்தை மேலும் சிக்கலில் கொண்டு செல்லாமல் நாம் வெளியில் இருந்து கொண்டு முழுமையான ஆதரவை வழங்கி மக்களுக்கு நல்லது நடப்பதை உறுதி செய்ய வேண்டிய தேவையே இருக்கின்றது.

மேலும் தமிழ் முற்போக்கு கூட்டணி அமைக்கப்பட்டதன் காரணமே கொள்கையுடன் நாம் செயற்பட வேண்டும் என்பதே. இந்த கூட்டணி எந்த காரணம் கொண்டும் சிதைந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் இருக்கின்றது. நாம் எமது மக்களின் நன்மை கருதி இந்த கூட்டணியை பாதுகாக்க வேண்டிய தேவை எம் அனைவருக்கும் இருக்கின்றது. அந்த கூட்டு பொறுப்பை நாம் மதித்து நடக்க வேண்டும்.

# மஸ்கெலியா நல்லதண்ணி வீதி மேலும் ஒரு வாரம் தொடர்ந்தும் மூடப்படும்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



மஸ்கெலியா நல்லதண்ணி பாதை மேலும் ஒரு வாரம் தொடர்ந்தும் மூடப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த வீதியை வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதி வழங்க வேண்டாம் என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கட்டளை பிறப்பித்துள்ள நிலையில் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் வரை பாரிய வெடிபுகள் ஏற்பட்டு உள்ளது என ஆய்வில் தகவல் கிடைத்துள்ளதென நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ரஞ்சித் அலககோன் தெரிவித்தார்.

கடந்த 16 தினங்களாக இந்த வீதி மூடப்பட்டு உள்ள நிலையில் மேலும் ஒரு வாரம் தொடர்ந்து மூடப்படும் எனவும் பொதுமக்கள் எக் காரணம் கொண்டும் மண் சரிவு ஏற்பட்டு உள்ள பகுதிகளில் நடமாடவோ அவ்வீதி ஊடாக பயணிக்க வேண்டாம் எனவும் மண் சரிவு ஏற்பட்டுள்ள பகுதிகளில் வாகனங்கள் தரித்து நிற்பதை லக்சபான தோட்ட எல்லையில் மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் குழுவினர் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

# நோர்ட்டன் – ஹற்றன் வீதியில் இ.போ.ச பஸ் விபத்து

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

நோர்ட்டன் - ஹற்றன் வீதியில் காசல்ரீ கொலனிக்கு அருகில் இடம்பெற்ற இ.போ.ச பஸ் விபத்தில் குறித்த வீதியில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7.15 கொத்தலனைவில் லக்ஸபானவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனினும் அப் பகுதியில் சிறிய வாகனங்கள் மாத்திரமே செல்லக்கூடியதாக இருந்தது.



# இரண்டு வருடங்களில் சுமார் 25 மலைப் புலிகள்

## பொறிகளில் சிக்கி உயிரிழந்துள்ளன

**ஹாலிஎல விசேட நிருபர்**

கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 25 மலைப் புலிகள் பொறிகளில் சிக்கி உயிரிழந்துள்ளதாகவும், விலங்குகளை மீட்பதில் ஏற்பட்ட தாமதமே இந்த உயிரிழப்புக்குக் காரணம் என வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொறிகளில் சிக்கிய பெரும்பாலான புலிகள் சுமார் 15 மணித்தியாலங்களுக்குப் பின்னரே விடுவிக்கப்பட்டதாக அவர் கூறினார். பொறிகளில் நீண்ட நேரம் சிக்கி கிடப்பதால் அதனால் ஏற்படும் மன உளைச்சல் காரணமாக உடலில் ஏற்படும் இரசாயன மாற்றங்களாலும் உடல் உறுப்புகளில் ஏற்படும் காயங்களால் இந்த உயிரிழப்புகள் ஏற்படுவதாக வனவிலங்கு கால்நடை மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

போதிய எண்ணிக்கையிலான வனவிலங்கு கால்நடை மருத்துவர்கள் இல்லாததும் வனவிலங்கு கால்நடை மருத்துவர் அலுவலகங்கள் சில பகுதிகளில் இல்லாமையும் எரிபொருள் தட்டுப்பாடு, மயக்க மருந்து பணியாளர்கள் வருவதில் தாமதம்.

மேலும், கள வனவிலங்கு அலுவலர்கள் இல்லாததாலும் புலிகள் பொறிகளில் சிக்கி பரிதாபமாக உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்.

# அமைச்சர் கெஹெலியவின் வீட்டுக்கு தீ வைப்பு தொடர்பில் மூவர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

அமைச்சசர் கெஹெலிய றம்புக்வெல்லவின் தனிப்பட்ட வீட்டுக்கு தீயிட்டு சேதம் விளைவித்த சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மேமாதம் 9ம் திகதி காலி முகத்திடல் சம்பவங்களை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையின் போதே மேற்படி தீ வைப்பு சம்பவங்கள் இடம்பெற்றன.

கண்டிப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் முல்கம்பல, ஈரஸ்ஸகல மற்றும் விகார மாவத்தை ஆகிய பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நாவுல பிரதேசத்தில் ஒரு வகை சிறுநீரக நோய் பரவல்



**அக்குறணை குறூப் நிருபர்**

நாவுல பிரதேசத்தில் ஒரு வகை சிறுநீரக நோய் பரவி வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்டத்தில் உள்ள கோங்கஹவெல பிரதேசம் மற்றும் ஜுபிலி பிரதேச கிராம அதிகாரி பிரிவு போன்றவற்றிலே அதிகமான சிறுநீரக நோயாளர்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பிரதேநங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு காணப்படுவதாகவும் பல்வேறு நீர் நிலைகளில் இருந்து பெறப்படும் நீரினால் இவ்வாறு நோய்கள் ஏற்பட்டிருக்கலாம் எனப் பலர் கருத்து தெரிவித்தனர்.

இவ்வாறு 200 ற்கும் மேற்பட்டவர்கள் இப்பகுதிகளில் இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தெரிவிக்கின்றது.




கண்டியிலுள்ள இந்திய உதவித் துதுவராலயத்தினால் இந்தியாவின் 76 வது சுதந்திர தின வைபவ நிகழ்வுகள் கண்டி வாவிக்கரையில் அமைந்துள்ள உதவித்தூதுவராலய வளாகத்தில் (15) காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கண்டியிலுள்ள இந்திய உதவித் துதுவர் டாக்டர் எஸ். ஆத்திரா தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது. இந்தியாவின் தேசிய கொடியை ஏற்றி வைத்தபின் அவர் இந்தியக்குடியரசுத் தலைவரின் சுதந்திர தின ஆசிச் செய்தியையும் வாசித்தார்.

(படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி, அக்குறணை குறூப் நிருபர்கள்)

# ஸ்கல்பா தோட்டத்தில் மிளகாய் பொடியை தூவி தங்கச் சங்கிலி அபகரிப்பு

**தலவாக்கலை குறூப் நிருபர்**

கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் நேற்று குடியிருப்புக்கு பின்னாலுள்ள சமயலறையில் வீட்டு வேலை செய்து கொண்டிருந்த பெண்ணின் தங்க சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பெண் கழுத்தில் அணிந்திருந்த 2.5 பவுண் தங்க சங்கிலியை அவர் முகத்தில் மிளகாய் தூளை தூவி அபகரித்து சென்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பெண் கூச்சலிட அயலவர்களும் ஓடி வந்து திருடனை தேடியபோது அவன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான். இதனையடுத்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தலவாக்கலை பொலிஸார் குறித்த பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொண்டதோடு சந்தேக நபரை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.



கந்தப்பளை பார்க் தோட்ட அருள் மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடி மாத கடைசி செவ்வாய் பூசை (16) காலை முதல் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது சங்காபிஷேகம், ராகுகால பூசை, அம்மன் வெளிவீதி ஊர்வலம் மற்றும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படம்: ஆ.ரமேஸ்

# இந்த வருடத்தில் இதுவரை 4000 பேர் நாய்க்கடிக்கு உள்ளாகியுள்ளனர்

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாய்க்கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 4,000 ஆக அதிகரித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் பிரதி செயலாளரும் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான பாலித ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள கடுமையான மருந்து தட்டுப்பாடு தொடர்பில், பதுளை பொது வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், நாய் மற்றும் பூனைக் கடிகளுக்கு இலக்காவதால் ஏற்படும் நீர் வெறுப்பு நோயைத் தடுப்பதற்காக வழங்கப்படும் ஊசி மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்த அவர்,

இவ்வாறு செல்லப்பிராணிகள் அல்லது கட்டாக்காலி நாய்களால் ஒருவர் காயங்களுக்கு உள்ளானால் அந்த பிராணியை 14 நாட்களுக்கு பாதுகாப்பாக பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கும் அளவிற்கு சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

### சிரேஷ்ட அதிகாரியை சாதாரண தொழிலாளியாக கடமையாற்ற பணித்ததை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கு

# பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பெருந்தோட்டமொன்றில் நீர் விநியோக செயற்பாட்டாளராக 39 வருடங்களாக சேவையாற்றியவரை, சாதாரண தொழிலாளியாக கடமையாற்றுமாறு கூறியதை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்டவருக்கு எட்டு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் ரூபாவை (858000.00) இழப்பீடாக வழங்க தீர்ப்பு வழங்கப்பட்டது.

பதுளை தொழில் மன்றில் மேலதிக மஜிஸ்ரேட் நீதிபதி ஏ.எம்.ஏ. கருணாதிலக்க முன்னிலையில் மேற்படி வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஹாலிஎலைப் பகுதியின் டீன்ஸ் லேன்ட் பெருந்தோட்டப் பிரிவைச் சேர்ந்த வி.ஆர்.மேனன் என்ற தோட்ட நீர் விநியோக செயற்பாட்டாளர், சிரேஸ்ட சட்டத்தரணி எஸ். சத்தியமூர்த்தி ஊடாக கடந்த 2017.04.07ல் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த 1977ம் ஆண்டு தொடக்கம் டீன்ஸ்லேன்ட் பெருந்தோட்டத்தில் சாதாரண தொழிலாளியாக தொழில் கடமைகளை ஆரம்பித்த வி.ஆர். மேனன், காலப் போக்கில் தோட்ட முகாமைத்துவத்தின் அனுமதியுடன் நீர் விநியோக செயற்பாட்டாளராக பூரண பயிற்சிகளைப் பெற்று, அத்தொழில் கடமைகளில் 39 வருடங்களாக ஈடுபட்டு வந்தார். 2016.12.21ந் திகதி வி.ஆர். மேனன் தோட்ட நிருவாகத்தினால் சாதாரண தொழிலாளியாக கடமையாற்றுமாறு உத்தரவிடப்பட்டார். இவ் உத்தரவை ஆட்சேபித்து வி.ஆர்.மேனன் பதுளை தொழில் மன்றில் சிரேஸ்ட சட்டத்தரணி எஸ். சத்தியமூர்த்தி ஊடாக வழக்குத் தாக்கல் செய்தார்.

இவ் வழக்கு பல தடவைகள் இடம்பெற்று, இறுதியாக 39 வருட காலம் நீர் விநியோக செயற்பாட்டாளராக சேவையாற்றியவரை, சாதாரண தொழிலாளியாக கடமையாற்றுமாறு கூறியமை தவறு. ஆனாலும் வழக்காளியான வி.ஆர். மேனன் 60 வயதையடைந்திருப்பதால் மீளவும் தொழில் வழங்குவதை விடுத்து, அவருக்கு இழப்பீட்டினைப் பெற்றுக்கொடுக்க மேலதிக மஜிஸ்ரேட் நீதிபதி தீர்மானித்தார். அதையடுத்து 2022.08.18ந் திகதிக்குள் (22000 x 39 = 858000/) ரூபாவை வழக்காளி வி.ஆர். மேனன் என்பவருக்கு இழப்பீடாக வழங்குமாறு, தோட்ட முகாமைத்துவத்திடம் மேலதிக மஜிஸ்ரேட் நீதிபதி உத்தரவிட்டார்.

# வியட்நாம் பௌத்த மதகுருக்களின் பங்களிப்பில் 500 குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

**எம்.ஏ. அமீனுல்லா**

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் கண்டி குடும்பங்களுக்கு வியட்நாம் நாட்டு பௌத்த மதகுருக்களின் அமைப்பினால் சுமார் 500 குடும்பங்களுக்கு 25 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் மல்வத்து மகா விஹாரை வளாக. சரண சாரங்கரா சங்கராஜா நினைவு மண்டபத்தில் நடைபெற்றது.

மல்வத்து மகா நாயக்கர் அதி வணக்கத்துக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரிடம் வியட்நாம் மதகுருக்கள் குழுவொன்று இலங்கை மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகள் உள்ளதா என வினவிய போது, பொருளாதார நெருக்கடியில் வாழும் மக்களுக்கு உணவு வழங்கினால் போதும் எனவும் அது ஒரு சிறந்த தருமமுமாகும் என மகா நாயக்கர் சுட்டிக்காட்டியுள்ளதைய



டுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 500 குடும்பங்களுக்கு தலா 4000 ரூபா பெறுமதியான உணவுப்பொதிகளை வழங்க வியட்நாம் மதகுருக்கள் குழு விருப்பம் தெரிவித்துள்ளது.

மல்வத்து மகா நாயக்கர் அதி வணக்கத்திற்குரிய திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மற்றும் வியட்நாம் பிக்குகள் குழுவினரின் பங்குபற்றுதலுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களுக்கும் இந்த உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 18 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

15 முதல் 19 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.26 |
| இஷா | 07.38 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 2

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: சூன்ய

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | வெற்றி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

சர்வகட்சி வேலைத்திட்டத்தின் கீழ்

# முக்கிய பதவிகளை பகிர்ந்தளிக்க இரு வாரங்களில் இறுதித் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வகட்சி வேலைத் திட்டத்தின் கீழ் முக்கிய பதவிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் எதிர்வரும் இரண்டு வாரங்களில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமெனஅமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நிறைவேற்று சபையை உருவாக்குதல் எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சிக்கிடையில் பல்வேறு பாராளுமன்ற பதவிகள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களை நியமிப்பது தொடர்பிலும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமடைந்துள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் அது தொடர்பான முழுமையான விபரங்களுடனான அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளுக்கிடையிலும் இணக்கப்பாட்டை பெற்று சர்வகட்சி

04



அவுஸ்திரேலிய புதிய உயர்ஸ்தானிகர் மற்றும் நேபாள புதிய தூதுவர் தமது நற்சான்றிதழ் பத்திரங்களை, நேற்று (17) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தனர். அவுஸ்திரேலிய புதிய உயர்ஸ்தானிகராக போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ் (Paul Wesley Stephens) மற்றும் நேபாளத் தூதுவராக பாசூ தேவ் மிஷ்ரா (Bashu Dev Mishra) ஆகியோர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அரிசி கையிருப்பை அதிகரிக்க அரசு கவனம்: நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பம்

முதற்கட்டமாக 30,000 மெ.தொன் கொள்வனவு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் அதனைக் கருத்திற்கொண்டு அரிசி கையிருப்பை தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது அரிசிக்கான எத்தகைய தட்டுப்பாடும் கிடையாது என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், சிறுபோக அறுவடை மற்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி கையிருப்பில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையிலான காலகட்டத்தில் ஐந்து இலட்சம் மெற்றிக் தொன்அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை சிறுபோக அறுவடை நெல்லை அதிக விலையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர்,

அதற்கிணங்க முதற்கட்டத்திலேயே 30,000 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரிசியின் விலையை கிலோவொன்றுக்கு ஐந்து ரூபா வீதம் குறைப்பதற்கு அரசாங்கம் நேற்று முன்தினம் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கடல் வழியாக நாட்டை விட்டு செல்ல முயன்ற 10 பேர் தலைமன்னாரில் கைது



சட்டவிரோதமாக நாட்டை விட்டுச் செல்ல முயன்ற 10 பேர் தலைமன்னாரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் குருசபாடு கடற்பரப்பில் நேற்று முன்தினம்16 ஆம் திகதி இரவு இலங்கை கடற்படையினர் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே, சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடல் மார்க்கமாக மேற்கொள்ளப்படும் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக கடற்படையினர் நாட்டின் கடல் மற்றும் கரையோரத்தை உள்ளடக்கிய வழக்கமான ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, 16 ஆம் திகதி இரவு தலைமன்னாரம் குருசபாடு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, அந்த கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த கண்ணாடி இழை படகை கடற்ப டைக் கப்பலான 'புவனேக' அவதா னித்து சோதனைக்கு உட்படுத்தியது. அதில் 18 வயதுக்கு மேற்பட்ட நான்கு ஆண்கள், இரண்டு பெண்கள் மற்றும் நான்கு 18 வயதுக் குட்பட்டவர்கள், மற்றும் படகோட்டிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை, உறுமலை, கிளிநொச்சி மற்றும் கந்தளாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

மேலும், பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாப்பற்ற கப்பல்களை பயன்படுத்தி கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள மனித கடத்தலில் சிக்கி, நாட்டிலிருந்து சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சிப்பது மற்றும் உயிரை பணயம் வைத்து சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவதை தவிர்க்குமாறு கடற்படை பொதுமக்களிடம் வலியுறுத்துகிறது.

டயஸ்போரா தடை நீக்கப்பட்டது போன்று

# முஸ்லிம் அமைப்புகளின் தடைகளை நீக்க வேண்டும்

அமைச்சர் ஹாபிஸ் நசீர்அஹமட் ஜனாதிபதியிடம் கோரிக்கை

**தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்**



ஆறு தமிழ் புலம்பெயர் தொண்டர் அமைப்புகளின் தடையை ஜனாதிபதி கடந்த வாரம் நீங்கியிருந்தார். இவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கும் பொருளாதாரத்துக்கு உதவுவதற்கும் வரவேற்கின்றோம், அதே போன்று முஸ்லிம் சமூகத்தில் கல்வி, மத ரீதியாகவுள்ள 11 நிறுவனங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. அவற்றையும் அவர்களது நடவடிக்கைகளையும் பரிசீலித்து தடையை நீக்கும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோமென அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்துள்ளரார்.

நேற்று (17) அமைச்சின் புதிய திட்டங்கள் சட்ட வரைபுகள் பற்றி, நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

குருநாகல் பரகதெனியாவிலுள்ள அரபுக் கல்லாரி 05 தசாப்தங்களாக இயங்கி வருகின்றது. இந் நிறுவனம் முஸ்லிம் அநாதை மாணவர்கள் கல்விக்கு, பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி வசதிகளுக்கு மாதாந்தம் புலமைப் பரிசில், குடிதண்ணீர், வீடு கட்டுதல் போன்ற திட்டங்களை கடந்த 40 ஆண்டுகாலமாக செய்து வந்தனர். அந்த நிறுவனத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


அந்த நிறுவனம் கடந்த வருடம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது. இவ்வாறான நிறுவனங்களுக்கு ஒரு சிலர் தமது ஸக்காத் நிதியை வழங்கினர். அதனையே ஏழை முஸ்லிம் சிறார்கள், மாணவ மாணவிகளுக்கு மாதாந்தம் 1,500 ருபாவை கல்விக்காக வழங்கி வந்தனர். கடந்த 02 வருடமாக இந்த வறிய மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிறுவனங்களின் தடையையும் நீக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

சாரதி அனுமதி பத்திரம்; வாகன பரிமாற்றம்

## 13 வருடங்களின் பின்னர் கட்டணங்கள் மறுசீரமைப்பு

அனுமதி வழங்கியது அமைச்சரவை



சாரதி அனுமதி பத்திர கட்டணம் மற்றும் வாகன உரிமை மாற்ற கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் மறுசீரமைப்பு செய்ய மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கோரிய அனுமதிக்கு அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

2009 ஆம் ஆண்டு இறுதித் திருத்தம் செய்யப்பட்டது.

04






# சுற்றுலா பயணிகளின் வருகையில் அதிகரிப்பு



வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை மீண்டும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த மாதத்தின் முதல் இரு வாரங்களில் 17,000 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா,கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த மே மாதத்தில் மாத்திரம் நாளாந்தம் 650 சுற்றுலா பயணிகளின் வருகை பதிவானதுடன், தற்போது அந்த எண்ணிக்கை 1,600 வரை உயர்ந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சபை குறிப்பிட்டுள்ளது.

# ஆஸ்திரியா அரசினால் அத்தியாவசிய மருந்துகள்

ரூ. 04 மில். பெறுமதியானவை அன்பளிப்பு



ஆஸ்திரிய அரசாங்கம் நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

புதுடில்லியிலுள்ள ஆஸ்திரிய தூதரகம் மருந்துகளை புதுடெல்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்திடம் கையளித்துள்ளது.

புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகராலயம், ஆஸ்திரியா உட்பட இலங்கையில் நிறுவப்படாத பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 94 வெளிநாட்டு தூதரகங்களை ஒருங்கிணைக்கிறது.

27 வகையான அத்தியாவசிய மருந்துகளடங்கிய இந்த பொதிகள், இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவிடம் கையளிக்கப்பட்டதுடன், உடனடியாக இவை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. ஆஸ்திரியாவின் செயல் தூதுவர், மத்தியாஸ் ரடோஸ்டிக், மருந்துப் பொருட்களை உத்தியோகபூர்வமாக மிலிந்த மொரகொடவிடம் கையளித்தார்.

அவசர சிகிச்சைக்காக அத்தியாவசிய மருந்துகளை வழங்குமாறு வெளிநாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று இந்த நன்கொடை

04

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 249.31 | 261.39 |
| கனடியன் டொலர் | 274.90 | 288.06 |
| யூரோ | 361.54 | 376.57 |
| ஜப்பான் யென் | 2.6693 | 2.7772 |
| சிங்கப்பூர் டொலர் | 257.84 | 269.03 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 428.61 | 446.10 |
| சுவிஸ் பிராங்க் | 375.23 | 393.05 |
| அமெரிக்க டொலர் | 357.37 | 368.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.45 | கட்டார் ரியால் | 98.08 |
| குவைத் டினார் | 1,176.53 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.58 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.27 |

## முன்னாள் ஜனாதிபதி...

தெரிவிக்கும் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்துள்ளார்.

விமானப்படையினருக்கு மிக் விமானம் கொள்ளளவு செய்த விவகாரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்காக வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக அவர் நேற்று முற்பகல் கொழும்பு குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திலிருந்து வெளியேறிய அவர் அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்குத் திரும்பி மக்களுக்கு சேவை செய்வாரென்றும் எவ்வாறாயினும் அவர் மீண்டும் அரசியலில் ஈடுபட மாட்டாரென்றும் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்

## அவசரகால சட்டத்தை நீக்க...

தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது நாட்டைக் கட்டியெழுப்ப பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவையெனவும் சுட்டிக்காட்டினார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதியமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, தொழில்சார் வல்லுநர் சங்கங்கள் சம்மேளத்தின் தலைவர் துலித பெரேரா, தலைமைச் செயலாளர் உபாலி ஜயவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## இலங்கை பெண்ணுக்கு...

லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் இலங்கை நாணயத்தில் 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் ரூபா பரிசாக அவர் வென்றுள்ளார்.

தமிழ்நாட்டில் இருந்த அவர், திருமணத்திற்குப் பிறகு, அபுதாபியில் வேலைக்குச் சென்றார்.

அங்கு வாங்கிய லொத்தர்சீட்டுக்கு ஒரு மில்லியன் அபுதாபி திர்ஹம் (9,82,52,277.32 ரூபாய்) கிடைத்துள்ளது.

80 லொத்தர் சீட்டுகளை வாங்கிய அருள்சேகரம் செல்வராணி என்ற பெண் விடுமுறைக்காக தமிழ்நாட்டிற்கு சென்றுள்ளார்.

அவரது லொத்தர் பரிசு தொடர்பில் குறித்த லொத்தர் நிறுவனமே தகவல் வழங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## கொவிட் தொற்று நோயாளர்...

அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்புக்காக வழங்கப்படும் நான்காவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாவிடின் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுவரை நான்காவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக அதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில் தடுப்பூசிகளை முறையாக பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல் போன்ற வழமையான நடவடிக்கைளைப் பின்பற்றி நோய்த் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஆய்வுக் கப்பலின் வருகை...

(Wang Wenbin) இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட அவர், "யுவான் வாங் 5 கப்பல், இலங்கையின் தீவிர ஒத்துழைப்புடன், இந்தியா – அமெரிக்காவின் கவலைகளுக்கு மத்தியில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுள்ளது.

யுவான் வாங்5 கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு இசைவானவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இது வழக்கமான சர்வதேச நடைமுறையாகும்.

அவை எந்த நாட்டினதும் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பாதிக்காது என்றும் இது எந்தவொரு மூன்றாம் தரப்பினராலும் தடுக்கப்படக்கூடாது எனவும் அவர் கூறினார்.

சில நாடுகள் கொழும்பிற்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் உள் விவகாரங்களில் மொத்தமாக தலையிடுவதும், பாதுகாப்புக் கவலைகள் என்று கூறுவதும் முற்றிலும் நியாயமற்றது என்றும் அவர் கூறினார்.

## டிசம்பர் மாதம் வரை விடுமுறை...

நாடு முழுவதும் வாராந்தம் ஐந்து நாட்களும் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

பாடசாலைகளுக்கு போக்குவரத்து காரணங்களால் சமுகமளிக்க முடியாமை குறித்து முறைபாடுகள் எவையும் இதுவரையில் கிடைக்கவில்லை.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் அது குறித்து போக்குவரத்து சபை உள்ளிட்ட தரப்புடன் கலந்துரையாடி அந்த பிரச்சினையைத் தீர்த்து, வாராந்தம் 5 நாட்களும் பாடசாலைகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கொவிட் பரவலுக்கு மத்தியில் பாடசாலைகளை நடத்திச் செல்வது தொடர்பில் எச்சரிக்கை எதனையும் சுகாதார அமைச்சு இதுவரையில் முன்வைக்கவில்லை. அதற்கான வழிகாட்டிகள் மற்றும் அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வழங்கினால் அதன்படி பாடசாலைகள் செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

## இரு மாதங்களின் பின்னர்...

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சுப்பர் டீசல் கொண்டுவரப்படுகிறது.

இதேவேளை, தேசிய எரிபொருள் அட்டை திட்டத்தின் கீழ், அரச வாகனங்களைப் பதிவு செய்வது குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் கஞ்சன விஜயசேகர தலைமையில் நடைபெற்றுள்ளது.

இணையவழியில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், மாகாண செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## இந்திய பெருங்கடலில் செல்வாக்கு...

சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா மாத்திரமே என்றும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட சீன ஏவுகணை மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்பு கப்பலான 'யுவான் வாங் 5' தொடர்பான கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியப் பெருங்கடல், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே மற்றொரு விசேட அம்சமாக மாறாது. இந்தியா தனது தேசிய நலன்களை கவனித்துக்கொள்ள வேண்டும், ஆனால் பிராந்தியத்தில் தனித்துவத்தை கோர முடியாது.

இந்தியாவின் அண்டை நாடுகள் கலாசார ரீதியாக ஒன்றுபட்டுள்ளதுடன், பொருளாதார ரீதியாகவும் பிணைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உதயங்க வீரதுங்க CIDயில்...

விசாரணைப் பிரிவில் ஆஜரானார்.

விமானப்படையினருக்கு மிக் விமானம் கொள்வனவு செய்த விடயம் தொடர்பில் ஏழு மில்லியன் அமெரிக்க டொலர் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைக்காக வாக்குமூலமொன்றை வழங்கும் வகையிலேயே அவர் நேற்று குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் அதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது உதயங்க வீரதுங்கவை குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலமொன்றை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

## ஒரு வார காலத்தில் 1590...

50.8 வீதமானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டின் 56 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு நோய் பரவலுக்கான அதிஎச்சரிக்கை மிகுந்த வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்து டெங்கு நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதில் மக்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

அதேவேளை, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 25 க்கும் அதிகமான சிறுவர்கள் கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அவர்களில் சிலரின் நிலை மோசமாக காணப்படுவதாக சிறுவர் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு முடிந்தளவு நீராகாரம் வழங்குமாறும் அத்துடன் அவர்களுக்கு போதுமான ஓய்வைப் பெற்றுக்கொடுக்குமாறும் பரசிட்டமோல் மாத்திரைகளை அவர்களுக்கு வழங்குவது அவசியமென்றும் பெற்றோர்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## பெருந்தோட்டதுறை மக்களுக்காக...

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் (16) தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் கீழ் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த அமைப்பு, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்புச்சபை, புதிய கிராமபுற அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்கள்ஆகியவை அதற்காக செயற்படவுள்ளன.

இலங்கை மக்கள் தொகையில் 05 வீதமான மக்கள் தோட்டப்புற மக்களாகவுள்ளனர். நாட்டின் மத்திய, ஊவா, சப்ரகமுவ, தென் ஆகிய மாகாணங்களிலும் மற்றும் களுத்துறை மாவட்டம் போன்ற பகுதிகளிலும் தோட்டப்புற மக்கள் வாழ்கின்றனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பேரில் செயற்படும் இந்த ஒன்லைன் வைத்திய சேவை செயற்றிட்டம் O Doc என பெயரிடப்பட்டுள்ளது. அதற்காக ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் ரூ.100 செலவிடப்படுவதால் முழுக் குடும்பத்துக்கும் அதன் மூலம் சேவையை பெற்றுக்கொள்ளலாம்.

இதன் அடிப்படையில் 24 மணி நேர சேவையில் 150 இற்கும் மேற்பட்ட வைத்தியர் குழுவின் ஊடாக இந்த சேவையை பெறலாம்.

எதிர்வரும் காலங்களில் இந்த வைத்திய சேவை நாட்டின் அனைத்து தோட்டப்புற பகுதிகளுக்கும் அமைக்கப்பட வேண்டுமென அமைச்சர் உயர்அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

## மண்ணெண்ணெய் பிரச்சினைக்கு...

எமது மக்கள் அதிகளவான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதற்கு தீர்வு காணும் வகையில் எரிபொருளை தாராளமாக கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கடற்தொழிலாளர்களை பொறுத்தவரையில், சிறு கடற்தொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் பெரும் தட்டுப்பாடாக இருக்கின்றது. கொழும்பில் அதிகாரிகளுடன் தொட்புகொண்டு தனியார் துறையினரால் மண்ணெண்ணெய் இறக்கப்படுவது குறித்து தற்போதுள்ள நிலைமை தொடர்பில் கலந்துரையாடினேன்.

அதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனமும் மசகு எண்ணெய்யை சுத்திகரித்து மண்ணெண்ணெய்யை விநியோகிப்பதற்கான நடவடிக்கையையும் எடுத்து வருகிறது. இந்த வார இறுதியில் அந்த நடவடிக்கை கைகூடுமென்று நம்புகின்றேன்.

நன்னீர் மீன்பிடியை அதிகரிப்பதற்கான முயற்சி மத்திய அரசினால் முன்னெடுக்கப்படுகின்றதா? என அவரிடம் வினவியபோது,

நாடு தளுவிய ரீதியில் அந்த திட்டத்தை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தில் முறிப்பு எனும் இடத்தில் 30 சிறு குளங்களுள்ளன. அதில் 05 குளங்களை புதுப்பித்திருக்கின்றோம்.இந்த இடத்தை பார்ப்பதற்காக இன்று கண்காணிப்பு விஜயம் செய்து அதனை எவ்வளவு விரைவில் இயக்க முடியுமென முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அதேவேளை, ஏனைய குளங்கள், வாவிகளென எல்லாவற்றிலும் நன்னீர் மீன்குஞ்சுகளையும், இறால் குஞ்சுகளையும் விடுவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளோமென்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

## TNA இனி தலையிடாதிருக்க...

பயன்படுத்துகிறார்கள் என்றும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். எமது உறவுகளுக்கான நீதி கிடைக்கும்வரை இந்தப் போராட்டத்தை நாம் கைவிடப்போவதில்லை. 138 பேரை அம்பாறை மாவட்டத்தில் இழந்து இருக்கின்றோம்.

காணாமல் போனோருக்கான அலுவலகத்தினை 8 மாவட்டத்தினை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் வேண்டாம் என்று உறுதியாக கூறும்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்காரியாலம் வேண்டும் என்று கூறுவதற்கு காரணம் என்ன?

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இவ்வாறு செயற்படுவதானது எமக்கு மிகுந்த மனவேதனையை ஏற்படுத்துகிறது. இவ்வாறான அலுவலகங்களை எல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று ஊக்குவிப்பதற்கான காரணம் என்ன?

கூட்டமைப்பினர் எங்களுக்கான நீதியை பெற்றுத்தர விரும்பி இருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு முன்னரே அது கிடைத்திருக்கும். ஆனால் நீங்களோ கதிரைகளுக்கு ஆசைப்பட்டு அரசாங்கத்துடன் சேர்ந்து உழைக்கின்றீர்கள்.

செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் எமக்கான நீதி கிடைக்கும் என நம்புகின்றேன். இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கை பொறிமுறையில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம்.அதற்கான காரணத்தையும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் கூறி இருக்கின்றோம்.

இந்த உள்ளக பொறிமுறை விசாரணையை ஏன் விரும்பவில்லை என்ற காரணத்தையும் அங்கு தெளிவாக கூறியுள்ளோம்.

இன்று அரசாங்கத்துடன் இணைந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஊக்குவிக்க படுகின்றனர்.

இதில் அவர்களுக்கு அரசியல் இலாபம் உண்டு. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள்.

செல்லாக் காசான தமிழ் தேசிய கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம் என்றார்.

## முக்கிய பதவிகளை... 03ஆம் பக்கத் தொடர்

வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ள அவர் அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 வருடங்களின் பின்னர்... 03ஆம் பக்கத் தொடர்

13 வருடங்களின் பின்னர் இந்தக் கட்டணங்களுக்கான மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளதாக ஆணையாளர் வசந்த என். ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவின் அனுமதி கிடைத்துள்ளதாகவும், திருத்தங்கள் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத் துறைகள் பல வழங்கும் சேவைகளுக்கான கட்டணங்களுடன் ஒப்பிடுகையில், எங்கள் சேவைகளுக்கான கட்டணம் மிகவும் குறைவு, புதிய சாரதி அனுமதி பத்திரத்திற்கு 1700 ரூபாவும் புதுப்பிக்காமைக்கான அபராதமாக ஆண்டுக்கு ரூ.250 மட்டுமே விதிக்கப்படுவதாகவும் ஆணையாளர் நாயகம் அரியரத்னா தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல், டொலர்கள் பற்றாக்குறை காரணமாக, பாஸ்போர்ட் மற்றும் முன்பதிவு செய்யப்பட்ட விமான டிக்கெட் போன்றவற்றுடன், வெளிநாட்டில் பணி புரிய செல்லும் பணியாளர்களுக்கு மட்டுமே அச்சிடப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் வழங்கப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் மற்றைய புதிய மற்றும் புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரர்களுக்கு தகமைகள் பரிசீலிக்கப்பட்டு தற்காலிக அனுமதியினை காகிதம் மூலமே அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் எதிர்வரும் காலங்களில் டொலர் பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தவுடன் ஒஸ்ரியாவிலிருந்து இருந்து தருவிக்கப்படும் புதிய அட்டைகளை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் வேரஹரவில் உள்ள DMT சாரதி அனுமதிப்பத்திரத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனுராதபுரம், கம்பஹா, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, குருநாகல் மற்றும் மொனராகலை ஆகிய எட்டு மாவட்ட அலுவலகங்களில் இருந்து இந்த வருடம் மார்ச் மாதம் முதல் வெளிநாட்டில் வேலை தேடும் சுமார் 60 ஆயிரம் விண்ணப்பதாரர்களுக்கு வழக்கமான பிளாஸ்டிக் சாரதி அனுமதி அட்டை வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆஸ்திரியா அரசினால்... 03ஆம் பக்கத் தொடர்

வழங்கப்பட்டுள்ளது. உயர்ஸ்தானிகர் மொரகொட, ஆஸ்திரிய அரசாங்கம் வழங்கிய நட்பு மற்றும் நல்லெண்ணத்துக்கான தனது நன்றியைத் தெரிவித்தார்.

நிகழ்வில் பிரதி உயர்ஸ்தானிகர் நிலுக கதுருகமுவ, அமைச்சர் உபுல் புஷ்ப குமார, சபை உறுப்பினர் பமோத குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கு நிதியுதவி வழங்கிய...

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தமிழக நிதித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில், கூறியுள்ளதாவது:

இலங்கை ஒரு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், தமிழக அரசின் சார்பில் இலங்கை நாட்டிற்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று முதலமைச்சர் சட்டப் பேரவையில் அறிவித்தபோது, என் குடும்பத்தின் சார்பில் ஐம்பது இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் நான் அறிவித்தேன்.

இதன் அடிப்படையில், புரட்சித் தலைவி அம்மா நினைவாக, எனது மூத்த மகனும், மக்களவை உறுப்பினருமான ப.ரவீந்திரநாத் வங்கிக் கணக்கிலிருந்து இருபத்தைந்து இலட்சத்திற்கான வரைவோலை, எனது இளைய மகன் வி.ப.ஜெயபிரதீப் வங்கிக் கணக்கிலிருந்து ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கான வரைவோலை என மொத்தம் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கான வரைவோலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சீட்டினை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் முதலீடுகளை செய்ய...

கொரிய தூதுவர் சந்துஸ் வுன்ஜினுக்குமிடையில் சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. இதன் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீள் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி, நீர்ப்பாசனம், விவசாய உபகரணங்கள் உற்பத்தி, மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாகவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள புதிய இலகு முறை விசா வழங்கும் முறைமை கொரிய முதலீட்டாளர்களை அதிகளவில் இலங்கைக்கு வரவழைப்பதற்கு வாய்ப்பாக அமைவதாகவும் 1980 காலகட்டங்களில் இலங்கையில் அதிகளவு முதலீடுகளை செய்த நாடு என்ற வகையில் மீண்டும் அந்த வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் கொரிய தூதுவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை உற்பத்தி பொருட்களை இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் சந்தைக்கு விற்பனை செய்யும் வாய்ப்புள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி...

இவ்விடத்தை மிகத் தீவிரமாக ஆய்வு செய்த பின்னரேயே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தடைகள் நீக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்திய 20220801 திகதியிடப்பட்ட 2291/02 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஐ.நா 04 (7) விதிமுறையின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பான பின்னணி மற்றும் தெளிவுபடுத்தலை ஜனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ளது.

தடை நீக்கத்தின் சட்ட ஏற்பாடுகளும் பின்னணி தொடர்பிலும் பட்டியலிடுதல் அல்லது நீக்குதல் (தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள்) தொடர்பில் 2014 முதல் 01.08. 2022 வரை முறையான எட்டு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளமை தொடர்பிலும், அவற்றின் விவரங்களையும் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

தடை நீக்கப்பட்ட 06 அமைப்புகளின் விபரங்கள் மற்றும் தடை நீடிக்கப்பட்டுள்ள 15 அமைப்புகள் தொடர்பான விபரங்களை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு www.competentauthority.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக பார்க்கமுடியுமென்றும் ஜனாதிபதி செயலகம் அதரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள முழுமையான விளக்கம் 06 ஆம் பக்கம்...

## 9.5 kg தங்க பிஸ்கட்டுகளுடன்...

நேற்றுக் காலைவிமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நடத்திய திடீர் சோதனையின்போது இந்த தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டன.

துபாயிலிருந்து நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த EK 650 என்ற விமானத்தில் வந்த பெண்ணொருவரே இந்த தங்க பிஸ்கட்டுகளை கொண்டுவந்துள்ளார்.

தங்க பிஸ்கட்டுகளுடன் வந்த இப்பெண் தீர்வையற்ற கடையின் பெண் ஊழியர் ஒருவரிடம் தங்க பிஸ்கட்டுகளை கையளித்துவிட்டு அவருடன் வெளியேற முயற்சித்துள்ளார்.

அவர்களின் கைப்பைகளை சோதனையிட்டபோதும் தங்க பிஸ்கட்டுகள் இல்லாததையடுத்து தீர்வையற்ற கடையில் பெண்ணின் மேசைக்கடியில் காணப்பட்ட பையை சோதனையிட்டனர்.

இதன்போதே 9.5 கிலோ எடை கொண்ட 80 தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் இதனையடுத்து இரு பெண்களும் கைது செய்யப்பட்டதாகவும் சுங்கத்திணைக்களம் தெரிவித்தது.

கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. கைப்பற்றப்பட்ட தங்க பிஸ்கட்டுகளின் மொத்த பெறுமதி 205 மில்லியன் இலங்கை ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.






கரவெட்டி தேவமாதா ஆலயத்திருவிழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. காலை திருப்பலியும் அதனைத்தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் சிறப்பாக நடைபெற்றது. (படங்கள் கரவெட்டி தினகரன் நிருபர்)

# யாழ்.மாவட்டத்துக்கு வந்தடைந்த 200 மெ.தொன் யூரியா உரம்

*சாவகச்சேரி விஷேட நிருபர்*

யாழ்.மாவட்டத்தில் 2022/23 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கைக்கான முதற்கட்ட யூரியா உரம் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இ வ்வாறு 4 கொள்கலன்களில் வந்த 200 மெ.தொன் யூரியா உரத்தை பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கையேற்று கோண்டாவில் உரக் களஞ்சியத்தில் வைத்து கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் கையளித்திருந்தார்.



இம்முறை யாழில் காலபோக நெற்செய்கைக்கு 1300 தொன் யூரியா தேவைப்பட்டுள்ளது. மிகுதி உரம் விரைவில் கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தொலைபேசி வாயிலாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை தொடர்பு கொண்டு யாழ் மாவட்ட விவசாயிகள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்ததுடன் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மரக்கறி செய்கைக்கான உரங்களை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒருதொகை போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞன் கைது

*யாழ். விசேட நிருபர்*

யாழ்.கோண்டாவில் பகுதியில் ஒரு தொகை போதை மாத்திரைகளை விற்பனை செய்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

23 வயதான இளைஞன் ஒருவனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் வீரபத்திரர் கோவிலை அண்டிய பகுதியில் இளைஞன் ஒருவர் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைது செய்யும் வேளை அவரது உடமையில் இருந்து ஒரு தொகை போதை மாத்திரை மற்றும் அவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட பணம் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.



அதனையடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

திருக்கேதீச்சர ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் எதிர்வரும் 23.08.2022 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியிலிருந்து திருக்கேதீச்சர ஆலயத்தில் நடைபெறும். "பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாம்" இக் கும்பாபிஷேக மலரைப் பெற்றுக் கொள்ளும்படி திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையினர் அடியார்களை விநயமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.



யாழ்.கொழும்புத்துறை கலன்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக அமெரிக்காவில் வாழும் கப்ரியல் மனோகரன் குடும்பத்தினர் நிதியுதவிகளை செய்துள்ளனர். அவர்களின் பிள்ளையின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவருடைய நிதிப்பங்களிப்பில் பூமணியம்மாஅறக்கட்டளையினூடாக குளாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவர் சாமசிறீ தேசமான் லயன் கலாநிதி நா.தனேந்திரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களால் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டது. (படம் வேலணை குறூப் நிருபர்)

# யாழில் தொடரும் போதை பொருள் கலாசாரம்

## ஊசி மூலம் போதைப்பொருள் செலுத்திய மற்றுமொரு இளைஞன் பலி

*யாழ்.விசேட நிருபர்*

கோப்பாய் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவன் தனது நண்பன் வீட்டுக்கு சென்ற போது திடீரென உயிரிழந்துள்ளார். உயிரிழப்புக்கு ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிக்கொண்டமையே காரணமென உடல் கூற்று பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

திருநெல்வேலி பகுதியிலுள்ள தனது நண்பர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்றுள்ளார். அங்கு கதிரையில் அமர்ந்திருந்தவர் சிறிது நேரத்தில் மயங்கி சரிந்து விழுந்து உயிரிழந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றைய தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட உடல் கூற்று பரிசோதனையின் போது , கையில் ஊசி மூலம் போதை பொருளை செலுத்தியமையே உயிரிழப்புக்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸார் தமது விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை யாழில் கடந்த மூன்று மாத கால பகுதிக்குள் 7ற்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருளை ஊசி மூலம் செலுத்தியமையால் உயிரிழந்துள்ளனர்.

## ரயிலிலிருந்து தவறிவீழ்ந்து இராணுவ சிப்பாய் படுகாயம்

*யாழ்.விசேட நிருபர்*

ரயில் நிலையத்தில் இறங்க தவற விட்டமையால் மற்றைய ரயில் நிலையத்தில் அவசரமாக இறங்க முற்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் எஸ். விஜயசிங்க (வயது 26) எனும் இராணுவ சிப்பாயே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சிப்பாய் தனது ஊரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடமைக்காக கொழும்பு யாழ்ப்பாணம் கடுகதி ரயிலில் வந்துள்ளானர். எனினும் யாழ்ப்பாண நிலையத்தில் இறங்க வேண்டியவர், தூக்கத்தினால் அதனை தவற விட்டுள்ளார். திடீரென தூக்கத்தினால் எழுந்தவர் ரயில் சுன்னாகம் புகையிரத நிலையத்தில் தரித்து நிற்பதனை அவதானித்து, தூக்க கலக்கத்துடன் அவசரமாக இறங்க முற்பட்டுள்ளார். இதன்போது ரயிலிலிருந்து தவறி வீழ்ந்து காயமடைந்துள்ளார்.

# யாழ்.போதனா வைத்தியசாலை நிலைமைகளை ஆராய்வதற்கு அங்கஜன் எம்.பி விஜயம்

*பருத்தித்துறை விசேட நிருபர்*

யாழ்.போதனா வைத்தியசாலையின் நெருக்கடி காலசெயற்பாடுகள் மற்றும் உள்ளக நிலவரங்களை ஆராயும் விதமாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் அங்கு விஜயமொன்றை நேற்று மேற்கொண்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தியை சந்தித்த அவர், வைத்தியசாலை நிலமைகளை ஆராய்ந்ததோடு, வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இதன்போது வைத்தியசாலை எதிர்கொள்ளும் இடப்பற்றாக்குறை, நோயாளர் விடுதிகளின் விஸ்தரிப்பு, மேலதிக சிகிச்சை மையங்களின் தேவைகள், வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வசதிகள் தொடர்பாக பணிப்பாளரால் எடுத்துரைக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கு தேவையான இணைந்த சேவைகளை வழங்கும் மையங்களை உருவாக்குதல், வைத்தியசாலை உள்ளக மற்றும் வெளியக விஸ்தரப்பு பணிகள் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மேலும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் அவற்றுக்கான பூர்வாங்க பணிகள் தொடர்பிலும் இச்சந்திப்பில் உரையாடப்பட்டன.

மேலும், வைத்தியசாலைக்கு அண்மித்துள்ள நிலங்களை உரிமையாளர்களிடம் கோரிப்பெற்று, புலம்பெயர் கொடையாளிகளின் உதவியோடு வைத்தியசாலைக்கு தேவையான பிரிவுகளை அமைக்க முடியும் எனவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், யாழ் நகரப்பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டமொன்றை, போதனா வைத்தியசாலைக்கு பயன்சேர்க்கும் வகையில் முன்னெடுப்பது தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. இது தொடர்பான திட்டமுன்மொழிவை உருவாக்கும் நோக்கில் முத்தரப்பு சந்திப்பொன்றை விரைவில் நடாத்த தீர்மானித்துள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.



யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், ஆளணியை அதிகரிப்பது தொடர்பிலும் உரையாடப்பட்டதுடன், இலங்கை தாதியர் சேவையில் 95% பெண்கள், 5% ஆண்கள் என்ற ஆட்சேர்ப்பு விதத்தில் கொள்கைரீதியான மாற்றம் கொண்டுவரப்படுகையில் ஆண் தாதியர்களை அதிகமாக சேவையில் உள்ளீர்க்க முடியும் எனவும் இச்சந்திப்பில் யோசனை முன்வைக்கப்பட்டது. இதேவேளை, யாழ்ப்பாண மக்களுக்கு பல்வேறுபட்ட நெருக்கடி காலங்களிலும், இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றிவரும் யாழ் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான உதவிகளை செய்துவரும் உள்ளூர் மற்றும் புலம்பெயர் நன்கொடையாளிகளுக்கு இச்சந்திப்பின்போது வைத்தியசாலை பணிப்பாளரிடம் அங்கஜன் இராமநாதன் தனது நன்றியை தெரிவித்திருந்தார்.

தினகரன் THINAKARAN තිනකරන්

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 முஹர்ரம் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



கூறாமை நோக்கக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி

ஒருவன் வாயால் சொல்லாமல் இருக்க, அவனுடைய முகத்தையும் கண்ணையும் பார்த்தே அவன் மனக்கருத்தை அறிந்து கொள்பவன், எப்போதும் வற்றாத கடலால் வளைக்கப்பட்ட இவ்வுலகத்தவர்க்கு ஆபரணம் போன்றவன்.

# முச்சக்கரவண்டி சாரதிகளிடம் மக்கள் விடுக்கும் வேண்டுகோள்!

அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம் கொடுத்திருக்கின்றது. இப்பொருளாதார நெருக்கடி சமூகத்தில் எல்லா மட்டத்தினர் மத்தியிலும் தாக்கங்களையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. அதற்கு தீர்வும் நிவாரணமும் கோரி கடந்த சில மாதங்களாக ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இப்பொருளாதார நெருக்கடி மக்களுக்கு சுமையாகவும் பாதிப்பாகவும் அமைவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைளும் வேலைத்திட்டங்களும் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படவே செய்கின்றன. அவற்றில் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பாவனையாளர்களுக்குத் தொடராகப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களும் டீசல், பெற்றோல் மற்றும் எரிவாயு என்பவற்றுக்கான விலைக் குறைப்பும் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றின் பிரதிபலன்கள் பாவனையாளர்களைச் சென்றடைந்த வண்ணமுள்ளன.

என்றாலும் பெற்றோல் மற்றும் டீசலை அடிப்படையாகக் கொண்ட ஆட்டோ வண்டிகளின் சாரதிகளும் அவற்றின் உரிமையாளர்களும் தற்போதைய சூழலில் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்கின்ற அதேநேரம், அவர்களது வாகனத்தை வாடகைக்கு அமர்த்துபவர்களுக்கு அவற்றின் நன்மைகளை வழங்குவதாக இல்லை. இது தொடர்பில் பரலவாகக் குற்றச்சாட்டுகளும் புகார்களும் தெரிவிக்கப்படுகின்றன. இப்புகார்களும் நியாயமானவையாகவே உள்ளன.

இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக பெற்றோல், டீசலின் விலை அதிகரித்துள்ள போதிலும், அவை ஐநூறு ரூபாவுக்கும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் இப்பொருளாதார நெருக்கடி ஆரம்பிக்க முன்னர் இருந்ததை விடவும் தற்போது விலை அதிகம் என்பது மறுப்பதற்கில்லை. என்றாலும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இவ்விலை அதிகரிப்பில் சில வாரங்களுக்கு விலை குறைப்பும் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் எரிபொருள் பற்றாக்குறையைப் பயன்படுத்திக் கொண்டுள்ள பெரும்பாலான ஆட்டோ வண்டிகள், முன்பு ரூபா 100.00 க்கும் ரூபா 150.00 க்கும் மேற்கொள்ளப்பட்ட பயணங்களுக்கு தற்போது ரூ. 500.00, ரூ. 600.00 என்றபடி அறவிடும் நிலைமை உருவாகியுள்ளது. இதற்கு டீசல், பெற்றோல் விலையேற்றம் காரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால் ஒரு லீற்றர் பெற்றோல் மூலம் ஆட்டோ முச்சக்கர வண்டியொன்று 15_ 20 கிலோ மீற்றர் தூரம் வரை பயணிக்கும். அது பெரும்பாலான முச்சக்கர வண்டிகளது சாரதிகளதும் உரிமையாளர்களதும கருத்தாகும்.

அப்படியிருக்கையில், இப்பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி முன்பு ரூபா 100.00, ரூபா 150.00 தூரத்திற்கு அறவிட்ட பயணக் கட்டணத்தை ரூபா 500, ரூபா 600 என்றபடி அதிகரித்திருப்பதன் ஊடாக ஒரு லீற்றர் பெற்றோலுக்கு செலவாகும் தொகை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அதனால் எஞ்சிய பெற்றோல் மூலம் மேற்கொள்ளப்படும் பயணத் தூரத்திற்கு அறவிடப்படும் கட்டணம் கொள்ளை இலாபம் என்பது தெளிவாகிறது. அது நியாயமானதல்ல.

ஓட்டோ சாரதிகள், அவற்றின் உரிமையாளர்கள் போன்று அவற்றைப் பயணங்களுக்கு வாடகைக்கு அமர்த்திக் கொள்பவர்களும் இப்பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கின்றனர். அதனால் ஓட்டோ வண்டிகளின் சாரதிகளும் அவற்றின் உரிமையாளர்களும் பயணக் கட்டணங்களை தீர்மானிப்பதில் நியாயமாக நடந்து கொள்ள வேண்டிய தேவை பரவலாக உணரப்படுகின்றது. தவறும் பட்சத்தில் இவ்வண்டிகளைப் பயணங்களுக்கு வாடகைக்கு அமர்த்திக் கொள்வதில் இருந்து பாவனையாளர்கள் தூரமாகும் நிலைமையே ஏற்படும்.

தற்போது அவ்வாறான நிலமை உருவாகியுள்ளதாகப் பல ஓட்டோ சாரதிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலைமை ஓட்டோ சாரதிகளையும் அதன் உரிமையாளர்களையும் பொருளாதார ரீதியில் பாதிக்கவே செய்யும்.

அதேநேரம் ஓட்டோ முச்சக்கர வண்டிகளைப் பயணங்களுக்கு வாடகைக்கு அமர்த்துபவர்களிடம் தற்போதைய சூழலில் வகைதொகையின்றி அதிக கட்டணங்களை அறவிடுவதைக் கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவையும் மேலெழுந்திருக்கின்றது. கொழும்பு மாவட்டத்தில் பயணங்களுக்கு இவ்வண்டிகளை வாடகைக்கு அமர்த்திக் கொள்பவர்களிடம் கட்டண அறிவீட்டுக்கென மீற்றர் முறைமை ஓட்டோ முச்சக்கர வண்டிகளுக்கு நடைமுறையில் இருக்கின்றது.

என்றாலும் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி கொள்ளும் பெரும்பாலான ஓட்டோ சாரதிகளும் உரிமையாளர்களும் அந்த மீற்றர்களைப் பயன்படுத்தாத நிலைமையும் காணப்படவே செய்கிறது. அதேநேரம் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் முச்சக்கர வண்டிகளுக்கு இம்மீற்றர் முறைமையை பரவலாக்கப்பட வேண்டிய தேவையும் காணப்படுகிறது. இவ்விடயங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என்ற வலியுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன.

ஆகவே முச்சக்கர வண்டிகளை பயண வாடகைக்கு அமர்த்துபவர்களிடம் கொள்ளை இலாபம் பெற்றுக் கொள்வதை தவிர்த்துக் கொள்வதில் அவற்றின் சாரதிகளும் உரிமையாளர்களும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் இன்றைய அவசரத் தேவையும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆழமாக ஆய்வு செய்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே தடைகள் நீக்கப்பட்டன!

## ஜனாதிபதி செயலகம் விளக்கம்



அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்திய 2022.08.01 திகதியிடப்பட்ட 2291/02 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் 04 (7) விதிமுறையின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பான பின்னணி மற்றும் தெளிவுபடுத்தல் வருமாறு:

தடை நீக்கத்தின் சட்ட ஏற்பாடுகளும் பின்னணியும்:

ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் VII அத்தியாயத்தின் கீழ் செயல்படும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை 2001 செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி UNSC 1373 தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு பொறுப்புகளை உறுப்பு நாடுகளுக்கு வழங்கியது.

அதன்படி, 2012 மே மாதம் 15 ஆம் திகதி, 1758/19 ஆம் இலக்க மேலதிக பொது வர்த்தமானி மூலம் 2012 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் விதிமுறைகள் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் வர்த்தமானியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக வெளிவிவகார அமைச்சு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அது தொடர்பான பொறுப்புகள் மற்றும் வரையறைகள் விதிமுறைகளில் விளக்கப்பட்டுள்ளன.

இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் வெளிவிவகார அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், புலனாய்வு அமைப்புகள், சட்ட அமுலாக்க முகவர் மற்றும் நிதிப் புலனாய்வுப் பிரிவு ஆகியன அடங்கிய குழுவொன்று, பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் உரிய உத்தரவுகளுக்கு அமைய, ஆய்வு நடத்தியது. கடந்த சில ஆண்டுகளில் பயங்கரவாதத்திற்கு நிதி உதவி வழங்குவதில் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் செயல்பாடுகள், ஆதாரங்களின் அடிப்படையில் பட்டியலில் சேர்த்தல் அல்லது பட்டியல் நீக்கம் செய்யப்படுகிறது.

பட்டியலிடுதல் அல்லது நீக்குதல் (தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள்) தொடர்பில் 2014 முதல் 01.08.2022 வரை முறையான எட்டு வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வர்த்தமானி இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி | நபர்களின் எண்ணிக்கை | | நிறுவனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| | | பெயரிடப்பட்டவை | நீக்கப்பட்டவை | பெயரிடப்பட்டவை | நீக்கப்பட்டவை |
| 1854/41 | 21/03/2014 | 424 | – | 16 | – |
| 1941/44 | 20/11/2015 | 155 | 269 | 08 | 08 |
| 1992/25 | 09/11/2016 | 86 | 69 | 08 | – |
| 2016/18 | 20/06/2018 | 100 | – | 08 | – |
| 2124/32 | 23/05/2019 | 125 | – | 11 | – |
| 2140/16 | 09/09/2019 | 188 | – | 11 | – |
| 2216/37 | 28/02/2021 | 577 | – | 18 | – |
| 2291/02 | 01/08/2022 | 316 | 316 | 15 | 6 |

தற்போது நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 2022.08.01 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி இலக்கம் 2291/02 தொடர்பான முதற்கட்ட விசாரணைகள் 2022 மார்ச் மாதத்தில் ஆரம்பமாகின. நாட்டுக்குள் அல்லது நாட்டிற்கு வெளியில் வாழும் அல்லது ஸ்தாபிக்கப்பட்ட பயங்கரவாத அல்லது தீவிரவாத அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்கள், அதற்குரிய நிதி, சொத்துக்கள், பயங்கரவாதச் செயல்கள் அல்லது தீவிரவாத செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருந்தால், அவை பற்றியும் அரச பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட அரச புலனாய்வு சேவை உள்ளிட்ட சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுக்குரிய CID, CTID நிறுவனங்கள், கடந்த 06 மாதங்களாக ஆய்வு செய்தது. இந்த ஆய்வுகளுக்கமைய அது குறித்து முறையான ஆதாரங்களை தாக்கல் செய்த பிறகு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அந்த தனிநபர்கள் அல்லது அமைப்புகள் பட்டியலிடப்படவோ, நீக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், கடந்த வருடங்களில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் ஒரு வருட காலத்திற்குள் உரிய அதிகாரியிடம் விண்ணப்பத்தின் மூலம் நீக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்க வாய்ப்பு உள்ளது. அது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அதனை உறுதிப்படுத்தும் வகையில் காரணங்கள் முன்வைக்கப்பட வேண்டும். பின்னர் பட்டியலிலிருந்து அந்த நபர் அல்லது அமைப்பு நீக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வெளியுறவு அமைச்சருக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் கடமை, பொறுப்புவாய்ந்த அதிகாரிக்குரியது.

பின்னர், அரச பாதுகாப்புப் படையினரின் தகவல்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், உரிய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் குறித்த நபர் அல்லது அமைப்பு மீதான தடையை நீக்கலாமா வேண்டாமா என்பது குறித்து அமைச்சருக்கு பரிந்துரை வழங்கும் கடமை, பொறுப்பு வாய்ந்த அதிகாரியை சாரும்.

அமைச்சரின் முடிவே இறுதி முடிவு என்றும், பாதிக்கப்பட்ட தரப்பினர் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிடைக்கக் கூடிய பணம் அல்லது நிதி, முடக்கம் உத்தரவு அல்லது பிற நிதிச் சொத்துக்கள் அல்லது பொருளாதார ஆதாரங்கள் அல்லது பிற தொடர்புடைய சேவைகளால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனத்திற்கும் உயர் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

இந்த செயல்பாடுகள் ஒவ்வொன்றின் இறுதி முடிவும், அடுத்த வரவிருக்கும் வர்த்தமானியில் (ஆண்டுதோறும் வெளியிடப்படும்) உரிய அதிகாரி, செயலாளர், பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்படும். அந்த நடைமுறைகள் அனைத்தும், ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், 01.08.2022 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி 2291/2 மூலம், முறையான மற்றும் ஆழமான தகவல் ஆய்வு மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் 316 தனிநபர்களையும், 06 நிறுவனங்களையும் நீக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் புதிதாக அடையாளம் காணப்பட்ட 55 நபர்கள் மற்றும் 03 அமைப்புகள் உள்ளிட்ட 316 நபர்கள் மற்றும் 15 அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி ஊடாக தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

### தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் விபரங்கள்

1. உலகத் தமிழர் பேரவை (GTF)
2. அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் (ATC)
3. உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (WTCC)
4. தமிழீழ மக்கள் பேரவை (TEPA)
5. பிரிட்டிஷ் தமிழ் மன்றம் (BTF)
6. கனடிய தமிழ் காங்கிரஸ் (CTC)

### தடை நீடிக்கும் அமைப்புகள்

1. தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE)
2. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO)
3. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு TCC)
4. உலகத் தமிழ் இயக்கம் (WTM)
5. நாடு கடந்த தமிழீழ அரசு (TGTE)
6. உலகத் தமிழர் நிவாரண நிதியம் (WTRF)
7. HQ குழு (HQ Group)
8. கனடிய தமிழர் தேசிய அவை (NCCT)
9. தமிழ் இளைஞர் அமைப்பு (TYO)
10. தேசிய தௌஹீத் ஜமாஅத் (NTJ)
11. ஜமாத் மில்லதே இப்ராஹிம் (JMI)
12. விலாயா அஸ் செலானி (WAS)
13. தாருல் ஆதர் (DA)
14. இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM)
15. சேவ் த பேர்ல்

இது தொடர்பான மேலதிக ஆய்வுகளுக்கு www.competentauthority.gov.lk என்ற இணையத்தளத்தை அணுகலாம்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு
2022.08.17

# எமது நாட்டு பிஸ்கட் கம்பனிகளை மூட வைப்பதற்கு மறைமுக முயற்சி!

## பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிரீம் உற்பத்தி நிறுவனங்கள் வெளியிடும் சந்தேகம்!

இலங்கையில் பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிரீம், இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி செய்யும் கம்பனிகளான மலிபன், எட்னா, எலிபன்ட், உஸ்வத்த, லிட்டில் லயன் போன்ற நிறுவனங்கள் இணைந்து Lanka Confectionary Manufacturers Association என்ற அமைப்பை நிறுவியுள்ளன. இச்சங்கத்தின் தலைவர் மற்றும் குழு உறுப்பினர்கள் இணைந்து கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர்.

லிட்டில் லயன் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியும் இச்சங்கத்தின் தலைவருமான எஸ்.எம்.டி.சூரியகுமார தலைமையில் ஊடக மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் இச்சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் திருமதி சானாஸ் ரவுப் ஹக்கீமும் கலந்து கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இனிப்புப் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரநிதிகள்

"இந்நாட்டில் மேற்படி நிறுவனங்களில் நேரடியாக 5 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு நாம் தொழில் வழங்கியுள்ளோம். எமது உற்பத்தியான பிஸ்கட், கேக் அதிக விலையானாலும் பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மலேசியா போன்ற 50 நாடுகளுக்கு அதன் சுவை கவர்ந்துள்ளது. அந்த நாடுகளுக்கெல்லாம் இலங்கை இனிப்புப் பண்டங்கள் சென்றடைகின்றன. அந்த நாடுகளிலும் இனிப்புப்பண்டங்கள் உற்பத்தி செய்கின்னர். ஆனால் அவர்களது பிஸ்கட்டை விட எங்களது நாட்டு உற்பத்தியை விரும்பி வாங்குகின்றார்கள். அவர்களது பிஸ்கட் எங்களது பிஸ்கட்டை விட விலை குறைவு. ஆனால் அந்த மக்கள் விலை கொடுத்து எமது பிஸ்கட்டினை வாங்குகின்றனர்.

திடீரென பிஸ்கட் உற்பத்திகள் விலை உயர்வதற்கான முதன்மைக் காரணம் இலங்கையில் டொலர் பெருமானம் கூடியதாலாகும். 4 மாதங்களுக்கு முன்னர் சீனி ஒரு கிலோ 100 ரூபா. தற்பொழுது சீனி 320 ரூபாவாகும். ஒரு முட்டை 60 ருபா, கோதுமை மா விலையேற்றம், டீசல் பெற்றோல் விலை ஏற்றம், மின்சாரம் துண்டிப்பு, எரிபொருள் இல்லாமை போன்றவற்றுடன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வங்கிகளில் எல்.சி முறை இல்லாமலும் உள்ளது. பிஸ்கட்டுகளை கொண்டு செல்லும் லொறிகள் வான்களுக்கு டீசல் இல்லாமை, டீசல் விலை ஏற்றம். போன்ற பாரிய பிரச்சினைகளை முகம் கொடுத்து வருகின்றோம்.

இதனைக் காரணம் காட்டி சில சமூக ஊடகங்கள் 5000 ஆயிரம் டொலர் சமூக ஊடகங்களில் விளம்பரத்திற்காக பணம் செலுத்தி எமது நாட்டு பிஸ்கட்கள் விலையேற்றம் என எங்களுக்கு சேறு பூசுகின்றன. இந்த விளம்பரத்தினால் எங்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. இவர்கள் எங்களது கம்பனிகளை மூட வைத்து விட்டு வேறு நாட்டின் பிஸ்கட் கம்பனிகளை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றார்களா? இவர்களது நோக்கம் என்னவென்று எங்களுக்கு தெரியவில்லை. எங்களது கம்பனிகளை மூட வைப்பதற்கான நோக்கமோ தெரியாது. இந்த உற்பத்தியில் உள்ளூர் முதலீட்டாளர்கள் மட்டுமே இத்துறையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திறம்பட செயல்படுத்தி வருகின்றோம். இவர்கள் வெளிநாட்டு பிஸ்கட்டுகளை இங்கு கொண்டு வர நினைக்கின்றார்களோ தெரியாது.

கடந்த 4 மாதங்களுக்குள் 277 வீதம் கோதுமை விலையேற்றப்பட்டுள்ளது. கோதுமை மா 77 இருந்து 290 ரூபா வரை விலை ஏற்றம். கோதுமை மா உள்ளூர் உற்பத்தி அல்ல. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. சீனி 114 இலிருந்து 320 ருபா வரை விலை அதிகரிப்பு. மரக்கறி 195 ருபாவில் இருந்து 475 வரை. அத்துடன் சகல உட்சேர்க்கும் பொருட்கள், பொதி சந்தைப்படுத்துதல் போன்ற சகல பிரச்சினைகளுக்கும் நாங்கள் முகம் கொடுத்துள்ளோம்

ஆனால் பிஸ்கட் 100 ருபாவில் இருந்து 271 ருபாவுக்கு மட்டுமே விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. நாங்கள் 50 நாடுகளுக்கு எங்களது பிஸ்கட்களை ஏற்றுமதி செய்து இந்த நாட்டுக்கு வருடாந்தம் 150 மில்லியன் டொலரை கொண்டு வருகின்றோம். எங்களது பிஸ்கட் கம்பனியில் தற்பொழுது கூட 50 ஆயிரம் பேர் தொழிலை இழந்துள்ளனர். நாங்கள் அரசுக்கு பெருந்தொகையான வரியையும் செலுத்துகின்றோம் . அரசாங்கம் நாடுகளின் தூதுவர்களை அணுகி இத்துறையை மேலும் மேம்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க உதவ முன்வருதல் வேண்டும்".

இவ்வாறு பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிரீம் இனிப்புப் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் அங்கு கருத்துத் தெரிவிததனர்.

"20 ஆயிரம் விவசாயிகளிடமிருந்து அவர்களது விளைச்சல்களை நாம் நேரடியாகக் கொள்முதல் செய்கின்றோம். கடந்த 2 வருடத்தில் கொவிட் 19 மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளால் எமது உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டார்கள்" என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தெஹிவளை-கல்சிசை விசேட நிருபர்





வெளிநாட்டு பிஸ்கட் நிறுவனங்களை இலங்கைக்குள் கால்பதிக்க வைக்கும் திட்டமெனவும் ஐயம்!

# கிழக்கின் குரல்



# பல்கலைக்கழக விரிவுரைகள் நடைமுறை வாழ்வியலை முதிர்ச்சியூட்டும் தேர்ச்சியை கொண்டிருப்பது அவசியம்

## தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் உரை

( நற்பிட்டிமுனை விஷேட நிருபர் )

சமூக இலக்குகள்,தொழிற்பாடுகள், அசைவியக்கம் மற்றும் முன்னேற்றம் போன்ற ஒன்றுடனொன்று தொடர்புடைய இயங்கியல் நடைமுறைகளில் மையச்சக்கரமாக தொழிற்படும் வினைத்திறனை தீர்மானிப்பவர்கள் விரிவுரையாளர்களே. என,தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார். விரிவுரையாளர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான ஆறுமாத பயிற்சிநெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே விரிவுரையாளர் ரமீஸ்அப்துல்லா இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமனம்பெற்ற விரிவுரையாளர்களுக்கென இப்பயிற்சிநெறி நடாத்தப்பட்டது. ஊழியர்கள் மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.ஜெஃபர் தலைமையில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,



இலங்கை போன்ற நாடுகளில் விரிவுரையாளர்களின் பணி தொடர்பான புதிய நோக்கம், தேவை என்பன நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மிகவும் பொறுமையாக விருத்தி செய்ய வேண்டிய சமூக பிரிவினராக விரிவுரையாளர்கள் காணப்படுகின்றனர். மிக விரிவான பாடத்திட்டங்களை தயாரித்து தொடர்ச்சியாக அவற்றை மீட்டு கொண்டிருப்பது,இவர்களின் நவீன தேவையாக மாறி வருகிறது.

பல்கலைக்கழகங்களில் போதியளவு அறிவை வழங்குதல் மட்டும் போதுமானதன்று, அத்தகைய அறிவை நடைமுறை வாழ்வில் பிரயோகிப்பதற்கான தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். விரிவுரையாளர்கள் என்ற நோக்கில் மாத்திரமின்றி சமூக மாற்றங்களை வழிப்படுத்துபவர்கள், விசைப்படுத்துபவர்கள் என்ற முறையிலும் இவர்கள் முக்கியமானவர்களாகத் திகழ்கின்றனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இயல்பாகவே உயரிய சமூகத் தொடர்புகளை பெறுவதால், சமூக மட்டத்திலும் இவர்கள் அங்கீகாரம் பெறுகின்றனர். இவர்களின் சமூக அந்தஸ்து ஒப்பீட்டு ரீதியில் உயர்வானதே! எனினும்,மொழியறிவு, விடய உள்ளடக்கம், கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் சமூக திறன்கள் என்பன இவர்களிடம் போதியளவு இல்லை என்றும் உணரப்படுகிறதது.

புத்துணர்ச்சி நோக்கும், தொடர் கல்வி ஊக்கமும், பன்மொழித் தேர்ச்சியும், தொழில் நுட்ப தகைமையும், எங்கும் எப்போதும் பணியாற்றும் மனப்பாங்குமுள்ளவர்களே விரிவுரையாளராக பணியாற்ற முடியும்.

இந்தப்புதிய எண்ணக்கரு இப்போது வலுப்பெற்று வருகிறது. இவ்வாறு செய்யுமிடத்து மாறிவரும் வகிபங்கினை வினைத்திறனுடனும், விளைதிறனுடனும், சமூக பொறுப்புணர்வுடனும் விரிவுரையாளர்களால் நிறைவேற்ற முடியும். இவை தொடர்பான ஆய்வுகளும் எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நல்லூர்க் கந்தனை தரிசிக்க கிழக்கிலிருந்து அதிக பக்தர்கள்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

நல்லூர் கந்தன் ஆலய உற்சவம் ஆரம்பமாகியுள்ளதால்,கிழக்கு மாகாணத்திலிருந்து இம்முறை பெருமளவிலான பக்தர்கள் ஆலயம் நோக்கிப் புறப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மற்றும் அம்பாரை மாவட்டங்களருந்தே அதிகளவான பக்தர்கள் நல்லூர் கந்தனை தரிசிக்க செல்கின்றனர். கொரோன் மற்றும் அரசியல், பொருளாதார நெருக்கடியால்,

கடந்த இரு வருடங்களாக,கிழக்கிலிருந்து நல்லூர் செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.தற்போது நிலைமைகள் சீரடைந்துள்ளதை தொடர்ந்து,

இலங்கை போக்குவரத்து சேவை பேரூந்துகளிலும் சில,ர் தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியும் நல்லூர் நோக்கி செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்து செல்லும் பக்தர்களை யாழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தும் வருகின்றனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று வடிகான் வீதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இராசிய தகவலின்படி உபபொலிஸ் பரிசோதகர் பகிதரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர், குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபரை கைது செய்தனர். அவரிடமிருந்து 230 கிராம் கஞ்சாவையும் பொலிஸார் மீட்டெடுத்தனர்.

சந்தேகநபர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச். எம்.ஹம்சா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.இதன்போது சந்தேக நபரை எதிர்வரும் (24) வரை விளக்கமரியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# கிழக்கில் 4 வலயக்கல்வி பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(காரைதீவு குறூப் நிருபர் )

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடமாக உள்ள, நான்கு வலயங்களுக்கான வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் வலயங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் 12 .9. 2022 வரை,ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

மேலதிக விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவங்களை கிழக்கு மாகாண சபையின் இணையதளத்தில் பிரவேசித்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியுமென கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ டபிள்யூ ஜி. திசாநாயக்க தெரிவித்தார்.

# மூதூர் நகரின் சூழலை மாசுபடுத்த வேண்டாமென தவிசாளர் அறிவிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் கழிவகற்றல் நடைமுறையை மேற்கொள்வதற்கு, இடையூறாக பொது இடங்களில் கழிவுகளை கொட்ட வேண்டாமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு,கொட்டுவதால் சூழல் மாசடைந்து, சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாக மூதூர் பிரதேசசபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம்.ஹில்மி ஆகியோர் பொது மக்களுக்கு அறிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (16) இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மூதூர் பிரதேச சபை, கழிவகற்றல் பணிகளை முன்னெடுத்து வருகிறது. இந்நிலையில் ஆற்றங்கரை, நீரோடை, மைதான வளாகம், பொது வீதி ஓரம் மற்றும் வடிகான்களின் கழிவுகளை கொட்டவேண்டாமெனவும் கோரப்பட்டுள்ளது.

நகரை தூய்மையாக்கும் பொருட்டு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் சுத்திகரிப்பு பணியை சிறப்பாக முன்னெடுக்க மக்கள் உதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# யூரியா வழங்கப்படாதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடாத்த முடிவு

(காரைதீவு குறூப் நிருபர்)

காரைதீவு கமநல பிரிவுக்குட்பட்ட 1442 ஏக்கர் காணிகளுக்குரிய யூரியாப்பசளை இன்னும் கிடைக்காதுள்ளதால் இந்தப்பூமிகளின் சொந்தக்காரர்களான 636 பேர் பெரும் திண்டாட்டத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

இதையடுத்து, காரைதீவின் நான்கு கண்டங்களைச்சேர்ந்த 636 விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடாத்துவதற்கு திட்டமிடுவதாகவும் தெரிய வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர், மகாஓயா பல்லன்ஓயா போன்ற பிரதேசங்களுக்கு யூரியா வழங்கப்பட்டபோதிலும், அறுவடை இன்னும் 50வீதம் நடைபெறாமலுள்ள காரைதீவு போன்ற பகுதிகளுக்கு யூரியா மறுக்கப்படுவதேன் என விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை, இப்போகத்தின்போது கள்ளச்சந்தையில் 40ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்ட யூரியாவைப் பயன்படுத்திய விவசாயிகளுக்கு, வெகுவாக விளைச்சல் குறைந்துள்ளது. இதற்கான காரணம் யூரியாவில் உப்பு கலக்கப்பட்டிருந்தமை எனவும் தெரியவந்துள்ளது.

இதனை கண்டறியுமுகமாக கண்டியிலிருந்து விவசாயத்திணைக்கள ஆராய்ச்சி உயர் அதிகாரிகள் அம்பாறைக்கு வந்து கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறுள்ள நிலையில் ,காரைதீவு கமநல சேவை நிலையத்தில் நான்கு ஊழியர்களே பணி யாற்றுகின்றனர். இங்கு பணியாற்றிய மூன்று உத்தியோகத்தர்கள் ஒரு மாதகாலத்திற்கென தற்காலிகமாக வேறு பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டனர்.

எனினும், ஒரு வருடமாகியும் இன்னும் இவர்கள் மீண்டும் நியமிக்கப்படாமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அலுவலகத்தில் ஆளணித்தட்டுப்பாடு நிலவி,விவசாயிகளின் கருமங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

# கிழக்கில் 96460 ஹெக்டெயரில் சிறுபோக நெற்செய்கை அறுவடை பெரும்போக செய்கைக்கு மானிய அடிப்படையில் பசளை அவசியம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் குறைந்தளவிலே சிறுபோக நெற்செய்கை பண்ணப்பட்ட வயல்நிலங்களில் தற்போது அறுவடைகள் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கமைய மட்டக்களப்ப மாவட்டத்தில் 32260 ஹெக்டெயரிலும், அம்பாறை மாவட்டத்தில் 64200 ஹெக்டெயரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன. இங்குள்ள விவசாயிகள் மிகுந்த சிரமங்களுகது மத்தியிலே தங்களது நெற்செய்கையை மேற்கொண்டனர்.

தற்போது அறுவடை காலம் ஆரம்பித்துள்ள நிலையில், அறுவடை இயந்திரங்களுக்கான போதியளவு டீசல் கிடைக்காமையால் குறித்த காலப்பகுதிக்குள் அறுவடை செய்து முடிக்க முடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். உரத்தட்டுப்பாட்டுக்கு மத்தியில் 40 ஆயிரம் ரூபாவிற்கு உரம் பெற்று, இரசாயன எண்ணை 20 ஆயிரம் ரூபாவுக்கு பெற்று, தங்க நகைகளை அடகு வைத்து குத்தகைப்பணம் கொடுத்து, எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுத்தே, இச்சிறுபோக நெற்செய்கையை இவர்கள்செய்தனர். எனினும் ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 15 வரையான நெல் மூடைகளே விளைச்சலாக கிடைப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எரிபொருளின் விலையேற்றம் மற்றும் தொடர்ச்சியாக குறித்த அளவுக்கு மேலதிகமாக டீசல் கிடைக்காமை போன்ற காரணங்களால் அறுவடைச் செலவும் அதிகரித்துள்ளது. இதனால் கிழக்கில் அதிகளவிலான விவசாயிகள் தங்களது நெற்செய்கையை கைவிட்டுச் செல்லும் துர்பாக்கிய நிலைக்குச் சென்றுள்ளனர். எதிர்வரும் பெரும்போகச் செய்கையை செய்வதற்கு மானிய அடிப்படையில் உரம் வழங்கப்படவேண்டும் அத்துடன் விவசாயிகளுக்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். இதனை இடைக்கால வரவு செலவு திட்டத்தில் அரசாங்கம் உள்ளடக்கவேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இறைச்சிக்கடைகளில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதையடுத்து, அனைத்து மாட்டிறைச்சிக் கடைகளிலும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (16) முன்னெடுக்கப்பட்டன.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். ரகீபின் விசேட பணிப்பின் பேரில், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, மறு அறிவித்தல் வரை குறித்த விலைப்பட்டியல் தொடர்ந்தும் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும், உரிய கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டு, அதிகரித்த விலைக்கு விற்கப்படுமாயின் எவ்வித முன்னறிவித்தலுமின்றி அக்கடைகள் மாநகர சபையினால் இழுத்து மூடப்படும் எனவும் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதேவேளை, மாட்டிறைச்சிக் கடைகளில் டிஜிட்டல் தராசு பயன்படுத்துவதற்கு இருவார காலஅவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 01.09.2022 ஆம் திகதி முதல் டிஜிட்டல் தராசு பயன்படுத்தத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் 35 மாட்டிறைச்சி கடைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய கொடியேற்றம்

கல்லடி குறூப் நிருபர்


கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புடையதும் தொண்மை வாய்ந்ததுமான மகா துறவி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று (17) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியேற்றத்தினை தொடர்ந்து முதல் எட்டு நாட்களும் திருவிழாக்கள் நடைபெற்று, ஒன்பதாம் நாளாகிய 25.08.2022 வியாழக்கிழமையன்று பி.ப 3 மணியளவில் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாளாகிய 26.08.2022 திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக் கடலில் சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெற்று இவ் வாண்டிற்கான மஹோற்சவ பெருவிழா இனிதே நிறைவடையவுள்ளது.



சௌபாக்கியா சமுர்த்தி விசேட வீடமைப்பு வேலை திட்டத்தின் கீழ் அட்டாளச்சேனை பிரதேச செயலக பிரதேசத்தில் ஒன்பது வீடமைப்புக்கான நிதி ரூபா 30 இலட்சம் ஒதுக்கப்பட்ட நிலையில் அதன் ஆரம்ப நிகழ்வாக அடிக்கல் நாட்டல் ஒலுவிலில் இடம்பெற்றது. (படம்: திராய்க்கேணி நிருபர்)

# மட்டு. நெளுகல தொல்பொருள் அறிக்கை சமர்ப்பிப்பு

தம்பலகாமம் குறூப் நிருபர்



மத்திய கலாசார நிதியத்தினால் மட்டக்களப்பு நெளுகல தொல்பொருள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணியின் அறிக்கையை முன்னிலைப்படுத்தும் நிகழ்வு தேசிய பாரம்பரிய, கலை மற்றும் கிராமிய கலை இராஜாங்க அமைச்சில் நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

இந்த அறிக்கையை மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகியோரிடம் வழங்கினார். தொல்பொருள் தளத்தில் உள்ள பழைய கட்டிடங்கள், தொட்டிகள், ஸ்தூபிகள் மற்றும் ஆசனகாரங்கள் உட்பட தொல்பொருள் மதிப்புள்ள பல தகவல்கள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. கோறளைப்பற்று மேற்கு பிராந்திய செயலகத்திற்கு உட்பட்ட வடமுனை கிராம சேவை களத்தில் அமைந்துள்ள நெலுகல தொல்பொருள் தளம் 2000 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது.

அதற்கமைவாக, தற்போது முன்னெடுக்கப்படும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இங்கு தெரிவித்தார். மேலும், தொல்லியல் துறைக்கு சொந்தமான காணியை இரண்டு வாரங்களுக்குள் பிரித்து வழங்குமாறும் நிகழ்வில் கலந்து கொண்ட தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்கவுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தொல்பொருள் இடத்தைப் பாதுகாத்து, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வழிபடுவதற்குத் தேவையான இடத்தை விரைவில் தயார் செய்யுமாறு மாகாண ஆளுநர் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.



அக்கரைப்பற்று பள்ளிவாசல்கள் நிர்வாகத்தின் கீழ் வரும், அம்பலத்தாறு வேலமரத்துவெளி பள்ளிவாசல் சேகுசிக்கந்தர் வொலியுல்லாவின் 130 வது வருடாந்த கத்தமுல் குர்ஆன் கொடியேற்ற வைபவம் பள்ளிவாசல் நம்பிக்கயாளர்சபை தலைவர் அல்ஹாஜ் ஏ எல். அபுல் காசிம் தலைமையில் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. நிகழ்வின் முக்கிய அம்சமாக இடம்பெற்ற கத்தமுல் குர்ஆன் நிகழ்வை ஜும்மா மஸ்ஜிதுன் நூரானியா பிரதம கதீப் அஸ்ஷேய்க் எ.எம். அனஸ் மௌலவி தலைமையில் உலமாக்கள் நடாத்திக்கொண்டிருப்பதை படத்தில் காண்க. (படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# குழந்தைகளுக்கு உணவு புகட்டுவதுடன் மாத்திரம் பெற்றோர் நின்றுவிடக் கூடாது!

## குழந்தை நல மருத்துவ நிபுணர் பீ.எம்.அர்சாத் அஹமட் தினகரனுக்கு வழங்கிய பேட்டி

காலையில் எழுந்ததும் செய்ய வேண்டிய ஒரு கடமை என்பதால் தான் இதற்கு நமது முன்னோர்கள் 'காலைக்கடன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். கடன் என்பதால் கட்டாயம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பிரச்சினை தான் என்கிறார் குழந்தை நல மருத்துவ நிபுணர் பீ.எம்.அர்சாத் அஹமட்.

மலச்சிக்கல் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை நாளாந்தம் கூடிக் கொண்டே செல்கிறது. சமூகத்தில் நிறைய குழந்தைகள் இந்த பிரச்சினையோடு வாழ்கிறார்கள். வளரும் இளம் சமுதாயத்தில், காலைக்கடன் கழிப்பது கஷ்டமானதாக மாறியிருக்கிறது.

அக்காலத்தில் நமது தாய்மார்கள், மூத்தம்மாமார்கள் குழந்தைகளை மலம் கழிக்க பழக்கினார்கள். தங்கள் கால்களில் தூக்கிவைத்து இருத்தி வைத்து பயிற்சி கொடுத்தார்கள். இதை ஒரு கடமையாக செய்தார்கள். ஆனால் இப்போது டயபர்(பம்பர்ஸ்) பாவனையோடு அந்தப் பழக்கம் வந்து விட்டது. பாரம்பரியத்தைப் பழக்குவதற்கு இன்று யாரும் இல்லை. டயபரைவாங்கினோமா, கட்டினோமா, கழட்டி எறிந்தோமா என்ற நிலை. இதனால், ஆறு ஏழு வயது வரை பிள்ளைகளுக்கு டயபர் அணிவிப்பவது சர்வ சாதாரணமாகி விட்டது. பெஷனாகி விட்டது. குழந்தைகளுக்கு உணவூட்டுவதில் மட்டுமே கவனமாக இருந்தால் மட்டும் போதாது. அதிலும் இப்போது கவனம் இல்லை என்பது வேறு விஷயம். தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் ஏதாவது ஒரு உணவை/ பக்கட்டை, கடையில் வாங்கி அதை உண்ணக் கொடுத்தால் சரி என்ற நிலை. இப்படி இருக்கும் போது சாப்பிடும் உணவு எது? சாப்பிடக் கூடாத உணவு எது? சாப்பிட்ட உணவு சரியாக ஜீரணிக்குமா? இதையெல்லாம் கவனிப்பதற்கு யாருக்கும் நேரமும் இல்லை. யாரும் அக்கறைப்படுவதாயும் தெரியவில்லை.

எதை உணவாக உண்டாலும், அது யாழ்ப்பாண ஒடியற் கூழாக இருந்தாலும், இத்தாலிய பிட்சாவாகஇருந்தாலும் அல்லது ஜப்பானிய சுஷியாக இருந்தாலும் அதில் கழிவு உண்டாகும். ஜீரணிக்கப்பட்ட உணவுபோக, சத்துகள் உறிஞ்சப்பட்ட பின், மீதமுள்ளது கழிவாகும். கழிவு உடலிலிருந்து கழிக்கப்பட வேண்டும், வெளியேற்றப்பட வேண்டும். இதுதான் மனித உடற்கூற்றியல்.



இது சரியாக நடக்காவிட்டால் குழந்தைகளுக்கு மட்டும் அல்ல, பெரியவர்களுக்கும் மலச்சிக்கல் ஏற்படும். இது தான் ஆரம்ப அடிப்படை.

தினமும் அல்லது இரண்டு, மூன்று நாட்களுக்கு மேல் மலம் வெளியேறாமல் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு மலச்சிக்கலைத் தவிர்க்கும் எளிய வழிகளை முறையாக பின்பற்றினாலே போதும். மலச்சிக்கல் பிரச்சினைஇலகுவாக நீங்கி விடும், குழந்தைகளும் ஆரோக்கியமாக வளரும் என்கிறார் குழந்தை நல மருத்துவ நிபுணர் டொக்டர் அர்சாத் அஹமட்.

"தினமும் மலம் வெளியேறுகிறது ஆனால் அதுவும் சிரமத்தோடுவெளியேறுகிறது என்றால் அதுவும் சிக்கல் தான். அது மலச்சிக்கல் (Constipation) ஆகும். கழிவு இலேசாக வெளியேபோக வேண்டும். சிறுவர்களில் மலச்சிக்கல் ஏற்படுவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. பொதுவாக, ஒரு வயதுக்கு கீழ்தாய்ப்பால் மட்டுமே குடித்து வளரும் குழந்தைகளுக்கு மலம் கழிப்பதில் பெரிதாக சிக்கல்கள் ஏற்படுவதில்லை. சில குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 7 தொடக்கம் 10 தடவை போகும். இன்னும் சில குழந்தைகளுக்கு 7_10 நாட்களுக்கு ஒரு தடவை போகும். இது குறித்து பயம் கொள்ள வேண்டியதில்லை. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளில் இது, ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. பிரச்சினை பக்கட் பால் மற்றும் இதரஉணவுகளைக் குழந்தைச் சாப்பிட தொடங்கியவுடன்தான் ஆரம்பமாகிறது.

மலச்சிக்கலை சரிப்படுத்த, தீர்க்க நார்ச்சத்தும், நீர்ச்சத்தும் நிறைந்த உணவுகளை சரியான விகிதத்தில்குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். முருங்கை, பொன்னாங்காணி, வல்லாரை, பசளி போன்ற பச்சை இலைக் கறி/கீரை வகைகளில் ஒன்றையோ, பலதையோ தினமும் உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். அதுபோல, நார்ச்சத்து மற்றும் நீர்ச்சத்துள்ள காய்கறிகளான வெண்டிக்காய், அவரை, பூசணி, பீர்க்கங்காய், சுரைக்காய், முள்ளங்கி, கரட், பலா போன்றவற்றையும் உணவில் சேர்க்க வேண்டும்.

வாழைப்பழம், மாம்பழம்,பப்பாசி போன்ற பழங்களை மென்று தின்பதற்கு பழக்கப்படுத்த வேண்டும். இவைகள், இயற்கை தந்தசிறந்த மலமிலக்கிகள்(Laxatives). ஜுஸ் போடுவதால் அதன் நார்ச்சத்து நீங்கி விடும். மலச்சிக்கலுக்கு பலன் கிடைக்காது. எனவே கடித்து தின்பதற்கு பழக்க வேண்டும். இதை விட, இரவு ஊறவைத்த 510 உலர்திராட்சைகளை அல்லது அத்திப் பழம்(fig fruit) ஒன்றை அல்லது ஒரு சில பேரீச்சம் பழங்களை(Dates) , காலை மற்றும் மாலையில் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். இவைகள் இன்னும்இலேசாக மலம் வெளிவர உதவி புரியும். மலச்சிக்கல் உள்ள பிள்ளைகளை, தினமும் காலையும் மாலையும் ஒரு பெரிய பாத்திரத்தில் அல்லது Bathtub இல், குழந்தையின் இடுப்பளவு தாங்கும் அளவு வெதுவெதுப்பான சுடுநீரில், 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை உட்கார வைக்கலாம். இதனால் குழந்தைகளின் அடிவயிற்று தசைகள், மலவாய் ஆகியவை சற்று தளர்வடையும். மலம்கழிக்க இலகுவாகும். மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளாக இருந்தால் சைக்கிள் ஓட்டுவது நல்ல பயிற்சி. இது இடுப்பு மற்றும் கால் தசைகளை உறுதியாக்கும். மலச்சிக்கலைத் தடுக்கும். சரியான நேரத்துக்கு தூங்கவும், எழும்பவும் பழக்கப்படுத்துவது மிகவும் அவசியம். நிறையப் பெற்றோர் இதில் அலட்சியமாக இருக்கிறார்கள்.

அதுபோல, ஒவ்வொரு நாள் காலையிலும், சரியாக ஒரே நேரத்தில், குழந்தைகளை கழிவறை சென்று வருவதற்கு தினசரி ஒரு நேரத்தைப் பழக்கப்படுத்துவது மிகவும் அத்தியாவசியம்.

சொக்லேட், சுவையூட்டப்பட்ட பால், மோல்ட், கோப்பி, இனிப்பு பண்டங்கள், துரித உணவுகள் மலச்சிக்கலை தூண்டும். இன்னும் சிக்கலாக்கும். மலச்சிக்கலை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளித்தால் நூறு வீதம் வெற்றி நிச்சயம். நாட்பட்டமலச் சிக்கல் சிக்கலாகவே அமையும். ஆகவே தாமதிக்காமல் கட்டாயம் உரிய அனுபவமும், தெளிவும் உள்ளவைத்தியரை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். காலைக் கடன் கழிக்கும் நிலையில் உள்ள எல்லோருக்கும் இங்கே சொல்லப்பட்டவை பயன் தரும். அவர்கள சிறுவர்களாக இருக்க வேண்டும் என்ற எந்த கட்டாயமும் இல்லை என்கிறார் சிறுவர் நல மருத்துவநிபுணர் டொக்டர் அர்சாத் அஹமட்.

ரிசாத் ஏ காதர் ...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# அக்கரைப்பற்றில் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்கும் நடவடிக்கை



நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டநிலைமையைக் கருத்திற் கொண்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களில் தேவையுடைய குடும்பங்களுக்கு அக்கரைப்பற்று அவசரகால நிவாரணப் பணியினர் உதவிக் கரம் நீட்டி வருகின்றனர்.

சொந்த இலாப நோக்கமற்றதாக மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நன்னோக்கில் உருவாக்கப்பட்ட இந்த நிவாரணப்பணிக்கு அக்கரைப்பற்றில் உள்ள ஸகாத் நிதியம், ஜம்இய்யத்துல் உலமா சபை, அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், மாநகர சபை, பிரதேச சபை, சமூக சேவை அமைப்புகள், இளைஞர் கழகங்கள் மற்றும் புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு கிடைத்து வருகின்றது.

இத்திட்டத்தின் பிரகாரம் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியுள்ள சுமார் 2000 தொடக்கம் 5000 வரையான குடும்பங்களுக்கு உதவியளிப்பதே இப்பணியினரின் இலக்காகும். இச்செயற்திட்டத்திற்கு இப்பகுதி மக்கள் பெறுமதியான பங்களிப்பு வழங்கி வருகின்றனர். இப்பணிக்கான நிவாரணங்களை சேகரிக்கும் பணி முதல் கட்டமாக ஜுலை மாதம் 30ஆம் திகதி முதல் இன்று வரைக்கும் அக்கரைப்பற்றின் சகல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இச்சந்தர்ப்பத்தில் அனைவரினதும் மனங்களை நெகிழ வைத்த விடயங்களில் ஒன்றுதான், பாடசாலை மாணவர்கள் தங்களின் கல்வித்தேவைக்காக உண்டியல்களில் சேமிப்பு செய்த பணத்தைக் கூட இப்பாரிய நிவாரணப் பணிக்கு கொடுத்துதவியதாகும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையானது அக்கரைப்பற்றில் பின்தங்கிய இடங்களில் மிகவும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை பின்தள்ளியது.

இம்மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பணி தற்போது பாரிய முன்னேற்றமடைந்துள்ளதாக இப்பணியினர் தெரிவிக்கின்றனர். மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் இப்பணியில் ஈடுபட்டுள்ள இப்பணியாளர்களுக்கு இப்பிரதேச மக்கள் தங்களது பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவதோடு, தங்களது நிவாரண உதவிகளை தாராள மனங்கொண்டு வழங்கி வருகின்றனர்.

எம்.எஸ்.எம்.றிஸ்வான் ...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி க்கு 150 மில். அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கும் IFC

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி டயலொக் (Dialog Axiata PLC ), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் (IFC) ஆதரவுடன் நாடு முழுவதும் புரோட்பாண்ட் இணைப்பை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் தயாராக உள்ளது.

மேற்படி IFC இன் 150 மில்லியன் டொலர் கடனுதவியானது , ஏற்கனவே உள்ள தளங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய 4G தளங்களை உருவாக்குவதன் மூலம் டயலொக் அதன் வலையமைப்பு திறனை மேலும் விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் உதவியாக அமையும். அதற்கமைய , Dialog அதன் 'ஃபைபர் ஒப்டிக் நெட்வொர்க்' தடத்தை (fibre optic network footprint) அதிகரிக்கவும் மற்றும் முக்கிய வலையமைப்பு செயற்பாடுகளில் கொள்திறன்கள் மற்றும் செயற்திறன்கள் இரண்டையும் அதிகரிக்கச் செய்து மேம்படுத்தல்களைச் செயற்படுத்தவும் முயல்கிறது.

இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனராக, டயலொக் நாட்டிலுள்ள மொபைல் மற்றும் நிலையான புரோட்பாண்ட் சந்தையில் டயலொக் 50 சதவீதத்திற்கும் மேலாக பிரதிநிதித்துவப்படுத்துகிறது, அதுமட்டுமன்றி இலங்கையில் பின்தங்கிய பகுதிகளுக்கு தரமான இணைப்புகளை திறம்பட விரிவுபடுத்துவதற்கும் தயாராக உள்ளது.




IFC இன் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் ஹெக்டர் கோமஸ் இது குறித்து தெரிவிக்கையில், "தரமான மற்றும் நம்பகமான தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல மடங்கு விளைவைக் கொண்டிருக்கிறது. சமூகங்களை நெருக்கமாகக் கொண்டுவரும் அதே வேளையில் டிஜிட்டல் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை இது ஊக்குவிப்பதுடன் வளர்ச்சி மற்றும் வேலைகளுக்கான புதிய மற்றும் புதுமையான வழிகளை திறப்பதற்கு இது வாய்ப்பளிக்கிறது" எனப' குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி தலைவர் டேவிட் நை பெக் லாவ் "IFC , ஆசிஆட்டா மற்றும் டயலொக் இடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பானது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. கடந்த பல வருடங்களாக டயலொக் மற்றும் இலங்கை மீது IFC கொண்டுள்ள நம்பிக்கைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், மேலும் நமது நோக்கிற்கேற்ப நாட்டின் தொலைத்தொடர்பு இணைப்பு உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கான எங்கள் பயணத்தில் நாம் தற்போது எதிர்கொள்ளும் பாரிய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவிகரமாக உள்ள அவர்களின் இந்த உறுதியான ஆதரவிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்" என்றார்.

# மூதூரில் பொது இடங்களில் குப்பைகள் கொட்டுபவர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

மூதூர் நகர் பிரதேசத்தில் பராமரிப்பு அற்ற அரச, தனியார் காணிகள், ஆற்றங்கரைகள், வடிகான்கள் மற்றும் நீர் ஓடைகளிலும் கண்டபடி இரவில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இச்செயலால் சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு சுகாதார வழிமுறைகளைப் பேணி பாதுகாக்கும் சமூக பொறுப்புடையவர்களாக செயற்படுவது, மூதூர் பிரதேசத்தில் வசிக்கும் சகல மக்களினதும் பொறுப்பாகும்.

மூதூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம சுற்றுச்சூழலிலும் தூய்மையைப் பேண வேண்டிய பொறுப்பு சகல மக்களுக்கும் உண்டு. இதுபோலவே பொது இடங்களையும் சுகாதார சீர்கேடுகள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

ஆனால் துர்நாற்றம் வீசக் கூடிய குப்பை கழிவுகளை கண்டபடி இரவில் உரப்பைகளில் கொண்டு வந்து இவ்விடங்களில் கொட்டிவிட்டு செல்லும் ஓர் அருவருக்கத்தக்க செயற்பாடு தற்போது இடம்பெற்று வருகின்றது.

மூதூர் பிரதேச சபையினால் பிரதேச குடியிருப்புக்களில் இருந்து அகற்றப்படும் திண்மக் கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடிகள், மரந்தடிகள் மற்றும் தேவையற்ற கழிவுப்பொருட்கள் என அகற்றக் கூடியதை அகற்றுவதற்கும் தேவையற்ற கழிவுகளை தமது காணிகளில் புதைப்பதற்குமாக அறிவித்தல்கள் மூதூர் பிரதேச சபையினால் விடுக்கப்பட்டன.

அதன் ஒழுங்கிலேயே சுத்திகரிப்பு நடைமுறையும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸின் வழிகாட்டல்களுக்கு அமைய ஒழுங்குபடுத்தப்பட்ட பணி ஒழுங்கில் இடம்பெற்று வருகின்றன.



இதனை தற்போது மக்கள் கடைப்பிடிப்பதை கைவிட்டு குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என அறிந்தும் சமூகப் பொறுப்புடன் செயற்படவேண்டிய மக்கள் இதனை விட்டு விலகி நடப்பது கண்டும் மூதூர் பிரதேச சுகாதாரத்தை பராமரிக்கும் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம். ஹில்மி பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் மக்களின் ஒத்துழைப்புடன் இச்சவாலை வெற்றி கொள்வது சம்பந்தமாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம். ஹில்மி, மூதூர் பிரதேச சபை செயலாளர் வி.சத்தியசோதி, திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர், சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் மூலமாகவும் அண்மையில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதன் போது இவ்விடங்களில் கழிவுகளை கொட்ட வேண்டாமென்ற விடயங்களும், அகற்றுவதற்கான செயற்பாடுகளும் இடம்பெற்று மக்களுக்கு தெளிவூட்டல் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

எஸ்.கஸ்ஸாலி ...
(மூதூர் தினகரன் நிருபர்)

# மக்களுக்கென கையளிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

மனிதன் உள்ளிட்ட உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு நீர் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். அதிலும் சுத்தமான குடிநீர் என்பது அனைவருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியமாகும்.

அந்தவகையில் இலங்கை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக அநுராதபுரம் மாவட்டத்தின் பலுகஸ்வெவ மைத்திரிகம பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.





கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னவின் வழிகாட்டுதலின் கீழ் சுகாதார அமைச்சின் அனுசரணையில் இலங்கை கடற்படையின் தொழினுட்ப மற்றும் மனிதவள பங்களிப்போடு சமூகப் பொறுப்புணர்வுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பாரிய சமூக சேவை இதுவாகும்.

இதன்படி கடற்படையினரால் அநுராதபுரம் பலுகஸ்வெவ மைத்திரிகம பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அன்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த சுத்திகரிப்பு நிலையமூலம் பலுகஸ்வெவ மைத்திரிகம பகுதியிலுள்ள சுமார் 600 இற்கு மேற்பட குடும்பங்களுக்கு சுத்தமான நீரை இலகுவாக பெற்றுக் கொள்ள உதவும். வடமத்திய மாகாணத்தில் அதிகமான மக்கள் சிறுநீரக நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ள நிலையில், கடற்படையினர் மேற்கொள்ளும் இவ்வேலைத் திட்டம் அனைவராலும் பாராட்டக் கூடிய ஒன்றாகும்.

ஏ.பிர்தௌஸ் ...
(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

# DFCC வங்கி நிலைபேற்றியலுடனான மின் உற்பத்திக்கான நிதித் தீர்வுகளை வழங்க SLASSCOM உடன் கைகோர்ப்பு

இலங்கையின் முதன்மையான வர்த்தக வங்கிகளில் ஒன்றான DFCC வங்கியானது, நாட்டுக்காக உச்ச அளவில் வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிக்கும் துறைகளில் ஒன்றான தகவல் தொழில்நுட்பம்/வணிகச் செயல்பாடுகள் முகாமைத்துவ தொழிற்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் உச்ச அமைப்பான SLASSCOM உடன் உத்தியோகபூர்வமாக ஒரு பங்குடைமையை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

தற்போதைய எரிசக்தி நெருக்கடியின் விளைவாக தொழில்துறை மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த கூட்டாண்மை மூலம் விசேட கடன் வழங்கல் திட்டங்கள், சலுகைக் கட்டண வீதங்கள் மற்றும் பல பிரத்தியேக நன்மைகள் மூலம் இத்துறைக்கான நிலைபேற்றியல் கொண்ட மின் உற்பத்திக்கான வாய்ப்பினை வழங்கக் கூடிய மற்றும் கட்டுபடியான அளவிலான கடனை வழங்க DFCC வங்கி மற்றும் SLASSCOM ஆகியன இணைந்து செயல்படவுள்ளன.

115,000 பேரை உள்ளடக்கியவாறு, 420 உறுப்பு நிறுவனங்களுடன், SLASSCOM இன் அங்கத்துவமானது இலங்கையின் தகவல் தொழில்நுட்பம்/வணிகச் செயல்பாடுகள் முகாமைத்துவ தொழிற்துறையின் ஏற்றுமதி வருமானத்தில் அண்ணளவாக 90% என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இரு நிறுவனங்களுக்கிடையிலான கூட்டாண்மை உத்தியோகபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு DFCC வங்கியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது, அங்கு இரு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். திமால் பெரேரா – பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, DFCC வங்கி பிஎல்சி, மற்றும் ஆஷிக் அலி துணைத் தலைவர், SLASSCOM ஆகியோர் முறையே இரு நிறுவனங்களின் சார்பாகவும் கையெழுத்திட்டனர்.



**இடமிருந்து வலமாக சமத்ரி காரியவசம் (துணைத் தலைமை அதிகாரி, பொதுச் சட்டம், DFCC வங்கி) அன்டன் ஆறுமுகம் (சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரி, கடல் கடந்த வங்கிச்சேவை, பணம் அனுப்புதல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி, DFCC வங்கி), திமால் பெரேரா(DFCC வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி),ஆஷிக் அலி (துணைத் தலைவர், SLASSCOM), ஜெஹான் பேரின்பநாயகம் (துணைத் தலைவர், SLASSCOM), நிஷான் மெண்டிஸ் (நிதிப் பணிப்பாளர், SLASSCOM), சமிந்தா டி சில்வா (நிறைவேற்று அதிகாரம் கொண்ட பணிப்பாளர், SLASSCOM)**

DFCC வங்கியின் பணிப்பாளரும்/பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திமால் பெரேரா கருத்து வெளியிடுகையில், "இந்தத் துறைக்கான நிலைபேற்றியல் கொண்ட, நம்பகரமான மற்றும் தன்னிறைவான மின் உற்பத்தியை உறுதிப்படுத்துவது இந்த காலகட்டத்தில் அவசியம். எனவே, SLASSCOM உடன் இணைந்து தொழில்துறைக்கு உறுதியான நிலைபேற்றியல் கொண்ட தீர்வுகளை நாம் வழங்குகிறோம். இந்த ஏற்பாட்டின் மூலம், DFCC வங்கியிடமிருந்து பிரத்தியேகமாக நிலைபேற்றியலுடனான மின் உற்பத்திக்கான முதலீடுகளுக்காக, தொழில்துறை பங்குதாரர்கள் விசேட கடன் திட்டங்கள் மற்றும் முன்னுரிமை வட்டி வீதங்களுடன் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்" என்றார்.

DFCC வங்கியானது 1988 ஆம் ஆண்டில் இலங்கையில் சூரிய மின்னுற்பத்தி PV உற்பத்தி ஆலைக்கு கடன் வழங்கி, நிலைபேற்றியலுடனான எரிசக்திக்கான கடன் வழங்குனராக தனது முன்னோடிப் பயணத்தை ஆரம்பித்திருந்தது.

## பெயர் மாற்றம்

மட்டக்களப்பு கிரான் சின்னவேம்பு பிரதேசம் குழந்தவேல் யோகராணி ஆகிய நான் சுயவிருப்பில் புனித இஸ்லாத்தைத் தழுவியதையடுத்து எனது பெயரை றிக்காஸா என மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

**- குழந்தவேல் றிக்காஸா -**

---

பொது அறிவித்தல்
கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது
2007 07 ஆம் இலக்கம் கம்பனிச்சட்டத்தின் 9 (2) பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்.

கம்பனியின் இலக்கம் : **PV 91031**
கம்பனியின் பழைய பெயர்:
Debug Engineering Services (Private) Limited
கம்பனியின் புதுய பெயர்:
**Debug Corporate Services (Private) Limited**
திகதி : **13.08.2022**
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :
**58, 42nd Lane, Colombo-06.**

*********

செயலாளர்:
**எகவுன்டன்சி என்ட் செகடேரியல் சர்விசர்ச் பியுரோ பிரைவட் லிமிட்டட்**
**86, எஸ்.டி. எஸ் ஜயசிங்ஹ மாவத்தை, கொஹுவல, நுகேகொடை.**
2022 ஆகஸ்ட் 16

---

## அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

கொழும்பு-02, யூனியன் பிளேஸ் 122 ஆம் இலக்கத்திலுள்ள ஏ.பி. காசி சிட்டி அண்ட் கம்பனி ஹோல்சேல் (பிறைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர்களாகிய ஹிலரி சிக்ஸ்டஸ் பீட்டர் ஆனந்தப்பா மற்றும் கிளாட்வின் இம்மானுவேல் கைத்தான் ஆனந்தப்பா ஆகிய நாம் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் டி.எல்.ஏச். கன்லத் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 3128 என்ற இலக்கத்தையும் 2021 நவம்பர் 23 ஆம் திகதியையுமுடையதுமானதும் மலிகதன்ன, குருதெனிய, 413/10 என்ற முகவரியையு முடையதும் மஹாவித்தான ஆராய்ச்சிகே சனத் சிரிலால் குமார என்பவரை (19632800108 என்ற தேசிய அடையாள அட்டையின் உரித்தாளர்) அற்றோணித்தத்துவக்காரராக நியமிக்கப்பட்ட நியமனமும் நியமிக்கப்பட்ட நோக்கமும் 2022 ஜூன் 23 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் முடிவுறுத்தப்பட்டுள்ளதினால், மேற்குறிப்பிட்ட மஹாவித்தான ஆராய்ச்சிகே சனத் சிரிலால் குமார என்பவரினால் அதனது பெயரிலும் அதனது பெயர் சார்பாகவும் 2022 ஜூன் 23 ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு மற்றும்/ அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நாம் பொறுப்பேற்கமாட்டோம் என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றோம்.

ஏ.பி. காசி சிட்டி மற்றும் கம்பனி ஹோல்சேல் (பிறைவட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்களாகிய ஹில்லரி சிக்துஸ் பீட்டர் ஆனந்தப்பா மற்றும் கிளாட்வின் இம்மானுவேல் கைத்தான் ஆனந்தப்பா ஆகியோர்.

**2022 ஓகஸ்ட் 16 ஆம் திகதியன்று.**

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் கடவத்த, மஹர, தலுபிட்டிய, மிஹிந்து மாவத்த, இல. 181/2 இல் வசிக்கும், தேசிய அடையாள அட்டை இல. 822651690V கொண்ட ஜாதுங்க கமகே தம்பர ரேனுகா ஆகிய என்னால் மாத்தறை நாதுகல, புலவத்தவில் வசிக்கும் தே.அ.அ.இல 913421795V கொண்ட பிரான்சிஸ் கங்கானம்கே யுரான் தீக்ஷன என்பவருக்கு வழங்கப்பட்ட பகிரங்க நொத்தாரிசு திருமதி ஈ.ஜி.ஏ. பிரசங்கனி இனால் 2016.09.06ம் திகதி உறுதி செய்யப்பட்ட இல. 806 கொண்ட, விசேட அட்டோர்ணி அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைக் குடியரசுக்கும் சகல பிரஜைகளுக்கும் இத்தால் அறிவிக்கிறேன். இதன் பிறகு பிரான்சிஸ் கங்கானம்கே யுரான் தீக்ஷன என்பவரால் என் சார்பாக மேற்கொள்ளப்படும்.

எந்த செயற்பாடுகள், கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் என பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**2021 நவம்பர் 11ம் திகதி**

**ஜாதுக்க கமகே தம்பர ரேனுகா**

---

## கேள்வி பத்திர அறிவித்தல்
## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## சுத்திகரிப்பு சேவையினை வழங்குதல்

இந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச கிளை அலுவலகங்கள் 63 இற்காக 2022.09.16 ந் திகதி தொடக்கம் 2023.09.15 ந் திகதி வரை பாதுகாப்பு சேவையினை வழங்குவதற் குரியதாக திணைக்கள கேள்வி சபையின் தலைவரினால் 2022.09.07 ந் திகதி மு.ப.02.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்வி ஆவணங்களுக்கு இணங்க விலைமனு கோரப்பட்டுள்ள அனைத்து அலுவலகங்களுக்கு அல்லது வலய ரீதியில் பட்டியற்படுத்தப்பட்ட அலுவலக குறிப்பில் வலயத்திற்குள் உள்ளடங்கிய அனைத்து அலுவலகங்களுக்கு விலைமனுவினை சமர்ப்பிப்பதற்கு இயலுமை உள்ளது. கேள்வி ஆவணங்களினை 2022,09.07 ந் திகதி தொடக்கம் மு.ப.10.00 மணி வரை மீள செலுத்தப்படாத ரூ.3500.00 கட்டணத்தினை இந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை கணக்காளர் (வழங்கல்) இடம் வழங்கி பெற்றுக் கொள்ள இயலும். மேலதிக விபரங்களினை கணக்காளர் (வழங்கல்) இடம் பெற்றுக் கொள்ள இயலும் என்பதுடன் தொலைபேசி இலக்கம் 011 3070870 ஆகும். தேவையாயின் கட்டணமின்றி கேள்வி ஆவணங்களினை இந்த அலுவலகத்தில் பரிசீலனை செய்து பார்க்க இயலும்.
03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் 580,000.00 ரூபாய்கள் கேள்வி பாதுகாப்பு பிணையுடன் 02 பிரதிகளுடன் கூடியதாக முத்திரையிட்டு இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் அல்லது பதிவு தபாலில் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் வைக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் ”சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்காக விலைமனுக் கோரல் 2022/09” என குறிப்பிடப்படுதல் வேண்டும்.
04. 2022.09.07 ந் திகதி மு.ப.02.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அந்நேரத்திற்கு பின்னர் எவ்விதத்திலும் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**கேள்விச் சபையின் தலைவர்.**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல.** 234/A3,
**டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

---

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

### விலக்களித்தலுக்கான உத்தேசம்

இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") இதன் மூலம் இலங்கை மின்சாரச் சட்டத்தின் 2009ஆம் இலக்க (திருத்தப்பட்ட) 20 ஆம் பிரிவின் இலக்கம் 21(2) இணங்க, ஆணைக்குழு பின்வரும் நோக்கத்திற்காக கீழே அடையாளம் காணப்பட்ட விண்ணப்பதாரருக்கு விலக்கு அளிக்க உத்தேசித்துள்ளது. மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்குதல் (இலங்கை மின்சார சபையிடமிருந்து 11 kV மின்சாரம் பெறுதல் மற்றும் ஹேவ்லொக் சிட்டி அடுக்குமாடி குடியிருப்பு முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு வழங்குதல்) குறிப்பிட்ட/அந்த வளாகத்திற்குள் வரையறுக்கப்பட்ட விநியோக வலையமைப்பைக் கொண்டிருப்பதால் மற்றும் ஆற்றல் விநியோகத்தின் அளவு குறைவாக உள்ளது.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE-D/22/04 | மிரேகா கெபிடல் லெண்டிஸ் பிரைவேட் லிமிடெட் | இல: 324, ஹேவ்லொக் வீதி, கொழும்பு 06 | குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.08.18

---

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

---

## 1964 இலக்கம் 28 இன் காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்டத்தின் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.:- GM/DS/2020/2/2/1/167/CH/EA
காணி அமைச்சின் குறிப்பு இல.:- 4-3/07/2020/HW/130

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 27.05.2022ஆம் திகதிய 2281/38 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : கம்பஹா |
| பிரதேச செயலாளர் பிரிவு | : கம்பஹா |
| கிராம நிலதாரி பிரிவு | : இல. 237, கொஸ்சின்ன கிழக்கு, இல. 237பீ, கொஸ்சின்ன மேற்கு 2 |
| கிராமத்தின் பெயர் | : கொஸ்சின்ன |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கம் 4261 |
| துண்டு இலக்கம் | : 1-23 (துண்டுகள் 23) |
| விஸ்தீரணம் | : 0.3230 ஹெக்டயார் |

**கே.ஏ.எஸ்.எல். குணதிலக்க**
**பிரதேச செயலாளர்**
**கம்பஹா.**

**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**கம்பஹா.**
**2022.08.16**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

## கேள்வி அறிவித்தல்
## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை
### 22வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் சேவையை வழங்குதல்

மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் 2022 ஒக்டோபர் மாதம் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ள 22ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் சேவையை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறையில் கேள்விகள் கோரப்படும். கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவர்களாகவும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களில் குறைந்தபட்சம் 1300 பட்டதாரிகளை புகைப்படமெடுத்தலில் குறைந்தபட்சம் மூன்று வருட காலம் திருப்திகரமான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் மேலதிக தகவல்களை 025-2266780 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் 2022-08-30ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வார நாட்களில் பிரதிப் பதிவாளர் / பரீட்சைகள் மற்றும் கல்வி அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் மீளச்செலுத்தப்படாத கட்டணமாக ஐயாயிரம் ரூபாவை (ரூபா 5000.00) இந்தப் பல்கலைக்கழகத்தின் சிறாப்பரிடம் செலுத்தி அல்லது மக்கள் வங்கி, அநுராதபுரம் கிளையில் மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தினால் பேணப்படும் 088-1-1001-8-1725841 எனும் கணக்கு இலக்கத்திற்கு வரவு வைத்த பற்றுச்சீட்டுடன எழுத்துமூல வேண்டுகோளொன்றைச் சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். 2022-08-30ஆம் திகதி வரையான வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை கேள்விகள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர்: RUSL/conv22/2022, மற்றும் கேள்வி முடிவுறுத்தல் திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு 2022-08-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், பிரதான நிர்வாகக் கட்டிடம், 2ஆம் தளம், பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விகள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் வருகை தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். பிந்திய கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

திணைக்களப் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.**
**16.08.2022**

---

## பெறுகை அறிவித்தல்
### பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
### தேயிலைச் சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை
## 2022/ 2023 வருட வாகனத் தொகுதியை காப்புறுதி செய்தல்

தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான 25 வாகனங்கள் மற்றும் 34 மோட்டார் சைக்கிள்களிற்கு 2022.09.20 முதல் 2023.09.19 வரையான ஒரு வருட காலத்திற்கு முழுமையான பொறுப்புக்களுடன் கூடிய IRCSL நிறுவனத்தில் பதிவு செய்யப் பெற்றுள்ள காப்புறுதி நிறுவனத்திலிருந்து காப்புறுதிப்பரப்பு (Insurance Cover) பெற்றுக் கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

வாகனத் தொகுதியின் காப்புறுதிக்காக 2022.08.18 முதல் 2022.09.15 வரை விலைமனுக் கோரப்படுகின்றது. 2022.09.15 அன்று பி.ப. 2.00 வரை இலக்கம் 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல. என்ற முகவரியிலமைந்துள்ள பிரதான அலுவலக நிதிப்பிரிவில் ரூபா 3,000/- இற்கான, மிளளிக்கப்படாத தொகையை வைப்புச் செய்து இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் நிறுவனமொன்றிற்கு விலைமனுப்படிவம் ஒன்று மாத்திரம் வழங்கப்படுவதுடன், அதற்காக நிறுவனப் பிரதானியின் சிபாரிசுக் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2022.09.15 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர், குறித்த விலைமனுக்கள், பதிவுத் தபாலில் அல்லது இவ் அதிகார சபையின் சேவைப் பிரிவில் வைக்கப்பட்டள்ள பெறுகைப் பெட்டியில் நேரடியாகச் சேர்த்தல் மூலம் சமர்ப்பிக்கலாம்.

2022.09.15 அன்று பி.ப. 2.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் அதிகாரமளிக்கப் பெற்ற அலுவலரொருவர் சமுகமளித்திருக்கலாம். விலைமனுக்களை அடக்கும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் “வாகனத் தொகுதியைக் காப்புறுதி செய்தல்” என்றும் வீலைமனு இலக்கமான மா.ச.பா./ போக்குவரத்து/ காப்புறுதி 2022/ 2023 எனக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தனித்தனியாகக் குறிப்பிட்டு முத்திரையிட்டு அனுப்புதல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் 011-7909020 அல்லது 50 ஐ அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேயிலைச் சிறு பற்று நிலங்கள் - அபிவிருத்தி அதிகார சபை,**
**இலக்கம் 70, பாராளுமன்ற வீதி, பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

---

Repeat Your ad For Better Offers

---

எனது இலக்கம்: ஆர்ஜி/என்பீ/11/2/35/2022/பக்கம்/செ.

### காணி பதிவு செய்தற் புத்தகங்களில் மீண்டும் தயாரிக்கப்பட்ட பக்கங்கள் பற்றிய (120 அதிகாரம்) சட்டவாக்கம்

01. இங்கு கீழேயுள்ள அட்டவணையில் இரண்டாம் நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாம் நிரலில் குறிப்பிடப்படும் உறுதிகளில் சம்பந்தப்பட்ட முதலாம் நிரலில் காணப்படும், தற்போது சிதைவடைந்துள்ள காணியின் பதிவு செய்த புத்தகங்கள்/ பக்கங்களை மீண்டும் முழுமையாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக காணியைப் பதிவு செய்துள்ள புத்தகங்களில் மீண்டும் தயாரிக்கப்பட்ட பக்கங்கள் பற்றிய (120 அதிகாரம்) சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.
02. 2022.08.19 முதல் 2022.09.02 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை எவருக்கும் மேற்படி தற்காலிக பக்கத்தை ஹோமாகம காணி பதிவு செய்தல் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
03. அத் தற்காலிக பக்கத்தில் ஏதேனும் அல்லது அவ்வாறான குறிப்புகளில் அடங்கியுள்ள ஏதேனும் விடயம் பற்றிய ஏதேனும் எதிர்ப்புகளை தெரிவிப்பதற்கு விருப்பமான ஒருவரால் அல்லது ஏதேனும் குறிப்பு அல்லது ஏதேனும் குறிப்பொன்றில் விடுபட்டுப் போன விடயங்களை உள்ளடக்குவதற்கான வேண்டுதலை சமர்ப்பிப்பதற்கு விரும்பும் ஒருவரால் சொல்லப்பட்ட எதிர்ப்பு அல்லது வேண்டதல் அடங்கிய ஆவணமொன்றை விரிவாக, தெளிவாக அதனை உறுதி செய்யும் ஆவணங்களுடன் 2022.09.09ம் திகதிக்கு முன் இங்கு கீழே ஒப்பமிட்டவருக்கு கிடைக்குமாறு பதிவாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களின் சிதைவடைந்துள்ள பக்கங்களின் விபரம் | காணிகளின் விபரம் | பதிவு செய்த உறுதிகளின் விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம காணி பதிவு செய்தல் அலுவலகத்தின் ஜி பிரிவின் 258 பக்கம் 237 வரிகள் | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபத்துவ ஹேவாகம கோரளை ஹோகந்தரவில் அமைந்துள்ள ‘அளுபோகஹவத்த மற்றும் கொடபரகஹவத்தயின் ஒரு பகுதி எனும் காணிக்கான எல்லை<br>வடக்கு: இக் காணியின் பகுதி<br>கிழக்கு: பொல்கஹவத்தகே சுகதன்ட உரிமையான காணியும் சுசானா சிகேராவுக்கு மற்றும் மேலும் ஒருவருக்கு உரிமையான காணியும்<br>தெற்கு: பொல்கஹவத்தகே சுகதன்ட உரிமையான காணியும்<br>மேற்கு: பாதையும்<br>தரைப் பிரதேசம்- ஏ01 ரூ:00 ப:00 | 01. பகிரங்க நொத்தாரிசு டி.வி. ரனசிங்க வினால 1957.01.15ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 15335 என்ற விற்பனை உறுதி<br>02. பகிரங்க நொத்தாரிசு ஆர்.டி. விதான வினால் 1967.06.28ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல 8237 என்ற அடகு உறுதி<br>03. பகிரங்க நொத்தாரிசு டப்.எம்.பி. விஜேசுந்தரவினால் 1972.07.11ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 18391 விற்பனை உறுதி<br>04. பகிரங்க நொத்தாரிசு டப்.ஆர்.எல்.ஜீ. விஜேசுந்தரவினால் 1994.12.21ம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 2536 எனும் விற்பனை உறுதி |

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/ஏ3 டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல**

**பி.எஸ்.பி. அபேவர்தன**
**பதிவாளர் நாயகம்**

---

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

### அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/22/25 | ஈகோ சோலார் வன் பிரைவேட் லிமிடெட் | எக்கோ சோலார் வன் பவர் புரொஜக்ட், 5000kW | புனானி, கோறளைப்பற்று, மட்டக்களப்பு | 5.00 | சோலார் PV |
| E/AL/N/22/26 | ஈகோ சோலார் டு பிரைவேட் லிமிடெட் | எக்கோ சோலார் டு பவர் புரொஜக்ட், 5000kW | புனானி, கோறளைப்பற்று, மட்டக்களப்பு | 5.00 | சோலார் PV |
| E/AL/N/22/27 | கே டி ஈபர்ட் அன்ட் சன்ஸ் சோலார் பவர் சப்ளையர்ஸ் பிரைவேட் லிமிடெட் | ஹொரணை 1 SBSP 11 சோலார் PV மின் உற்பத்தி நிலையம் | கொடெளடஹேன, தேவமுல்லா, கோவின்னா | 1.00 | சோலார் PV |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.08.18

# கேள்வி அழைப்பு

## சுகாதார அமைச்சு

## மாகாண பொது வைத்தியசாலை - பதுளை

பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் காணப்படும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இல. | வழங்கல் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| **Computer Item** | | | | | |
| 01 | PGHB/FW/G/10/22/01 | High End Computer System | 02 | 1000.00 | 40,000.00 |
| | | Desktop Computers | 07 | | |
| | | Laptops | 02 | | |
| | | Acer Travelmate P259 Series Laptop Battery | 10 | | |
| | | 16 GB Pen drive | 10 | | |
| | | 650VA UPS Systems | 09 | | |
| **Other** | | | | | |
| 01 | GHB/AC/NCB/2022/01 | Supply and Installation 9000 BTU Air Condition Machine for Drugs Stores | 06 | 1000.00 | 6900.00 |
| 02 | PGHB/FC/02/22 | Supply & Installation of Electric Drill System for Neurosurgery | 01 | 5000.00 | 400,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி முறை (NCB) அடிப்படையில் கேள்விகள் கோரப்படும்.

03. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கணக்காளரைத் தொடர்பு கொள்வதன் மூலம் (நீடிப்பு 1103) அல்லது பின்வரும் வைத்தியசாலையின் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. தகைமையுடைய கேள்விதாரர்கள் ஒரு கேள்விக்காக மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையும் வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் செலுத்தியதன் 2022-08-18ஆம் திகதி முதல் 2022-09-07ஆம் திகதி வரை தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோள் கடிதத்துடன் கம்பனிப் பதிவுச் சான்றிதழ் அல்லது வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2022-09-08ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதுளை மாகாண பொது வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரில் வந்து கையளிக்கவோ முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

07. இது சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை பதுளை மாகாண பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக் குழுவுக்குரியது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பொது வைத்தியசாலை,**
**பதுளை.**
**தொலைபேசி இல. 055-2222261** **தொலைநகல் : 055-2231205**
**மின்னஞ்சல்: info@badullapgh.org** **இணையதளம் : www.badullapgh.org**
**2022-08-16**

# பெறுகை அறிவித்தல்

## அலவ்வ பிரதேச சபை

## 2023ஆம் ஆண்டு ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

2023ஆம் ஆண்டிற்கான அலவ்வ பிரதேச சபையின் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்காக 2022.08.18 முதல் 2022.09.20 அன்று மு.ப. 10.00 வரை என்னால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், அன்றைய தினம் மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். 2022.08.18 முதல் 2022.09.19 வரை அலவ்வ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலவ்வ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அல்லது 037-2278175, 037-2278747 என்ற தொலைபேசி இலக்கங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | ஆதனங்களின் விபரம் | ஆகக் குறைந்த கேள்வி 2023 | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| **அலவ்வ பிரதான அலுவலகம்** | | | | |
| 01 | அலவ்வ வாரச்சந்தை சிற்றுண்டிச்சாலை (தற்காலிகம்) | 45,000.00 | 500.00 | 4,500.00 |
| 02 | அலவ்வ வாரச்சந்தை பொதுக்கழிவறை (தற்காலிகம்) | 20,000.00 | 500.00 | 2,000.00 |
| 03 | அலவ்வ பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை (10% கேள்விக் கட்டணம் அதிகரிக்கும் அடிப்படையில் 03 வருடங்கள் வரை (2023 - 2025) | 1,000,000.00 | 3,000.00 | 165,500.00 |
| 04 | அலவ்வ பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை (10% கேள்விக் கட்டணம் அதிகரிக்கும் அடிப்படையில் 03 வருடங்கள் வரை (2023 - 2025) | 72,116.00 | 1,500.00 | 23,870.39 |
| 05 | அலவ்வ பொதுச்சந்தை பன்றி இறைச்சிக்கடை (10% கேள்விக் கட்டணம் அதிகரிக்கும் அடிப்படையில் 03 வருடங்கள் வரை (2023 - 2025) | 169,279.00 | 1,500.00 | 44,825.07 |
| 06 | அலவ்வ பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 26,983.00 | 500.00 | 2,698.30 |
| 07 | அலவ்வ பஸ் நிலையப் பொதுக்கழிவறை | 79,200.00 | 500.00 | 7,920.00 |
| 08 | அலவ்வ புகையிரத நிலையப் பொதுக்கழிவறை | 58,410.00 | 500.00 | 5,841.00 |
| 09 | 1ஆம் கட்டை - ஹப்புகஹகெதர மீன் தட்டு | 32,186.00 | 500.00 | 3,218.60 |
| 10 | வலகும்புர புகையிரத குறுக்கு வீதிக்கண்மையில் உள்ள மீன் தட்டு | 4,840.00 | 500.00 | 484.00 |
| 11 | அலவ்வ நகரின் மீன் கடை இலக்கம் 01 | 110,000.00 | 500.00 | 8,800.00 |
| 12 | அலவ்வ நகரின் மீன் கடை இலக்கம் 02 | 110,000.00 | 500.00 | 8,800.00 |
| 13 | அலவ்வ நகரின் மீன் கடை இலக்கம் 03 | 110,000.00 | 500.00 | 8,800.00 |
| 14 | அலவ்வ நகரின் மீன் கடை இலக்கம் 04 | 110,000.00 | 500.00 | 8,800.00 |
| 15 | கல்வாரம செனசும பியஸ சபைக்காணியின் தெங்கு விளைச்சல் | 2,129.60 | 500.00 | 212.96 |
| **மஹரச்சிமுல்ல உப அலுவலகம்** | | | | |
| 01 | மஹரச்சிமுல்ல நகரின் மீன் தட்டு | 34,414.60 | 500.00 | 3,441.46 |
| 02 | பம்பதெனிய நகரின் மீன் தட்டு | 5,324.00 | 500.00 | 532.40 |
| 03 | மொரவலபிட்டிய சந்தி மீன் தட்டு | 5,287.70 | 500.00 | 528.77 |
| 04 | கொட்டாவத்த சந்தி மீன் தட்டு | 5,856.40 | 500.00 | 585.64 |
| 05 | கந்தேகெதர மீன் தட்டு | 9,663.06 | 500.00 | 966.30 |
| 06 | உரூளேமுல்ல சந்தி மீன் தட்டு | 8,584.95 | 500.00 | 858.49 |
| 07 | நாரம்மல வீதி 5ஆம் கட்டை அண்மையில் மீன் தட்டு | 5,057.80 | 500.00 | 505.78 |
| **கெப்பிட்டிவலான உப அலுவலகம்** | | | | |
| 01 | போயவலான வாரச்சந்தை | 33,880.00 | 500.00 | 3,388.00 |
| 02 | போயவலான நகரின் கோழி இறைச்சிக்கடை | 19,965.00 | 500.00 | 1,996.50 |
| 03 | போயவலான நகரின் பன்றி இறைச்சிக்கடை | 9,317.00 | 500.00 | 931.70 |
| 04 | போலவலான வாரச்சந்தை வளாகத்தின் மீன் தட்டு | 25,754.85 | 500.00 | 2,575.48 |
| 05 | ஹும்புளுவ நகரின் மீன் தட்டு | 5,789.85 | 500.00 | 578.98 |
| 06 | 6ஆம் கட்டை ட்ரைஸ்டார் நிறுவனத்தின் முன்னாலுள்ள மீன் தட்டு | 6,110.50 | 500.00 | 611.05 |
| 07 | மொறட்டுகந்த மயானத்தின் தெங்கு விளைச்சல் | 14,374.80 | 500.00 | 1,437.48 |
| 08 | இம்புல்கொட கல்கடுல்லஹேன துண்டு இலக்கம் 01 | 1,210.00 | 500.00 | 121.00 |

**2022.08.18**
**அலவ்வ பிரதேச சபை**
**பிரதான அலுவலகத்தில்.**

**பத்மா வெத்தேவ**
**தலைவர்,**
**அலவ்வ பிரதேச சபை.**

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD · IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு நீர்ப் பம்பிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல் என்பவற்றிற்கு ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| அம்பாறை மாவட்டத்தின் மிளகாய்ச் செயற்றிட்டத்திற்கு மின்சார நீர்ப் பம்பிகள் | LK-MOA- PMU-273414-GO-RFB | 300 | 540,000.00 | 7,500.00 |
| பதுளை மாவட்டத்தின் அன்னாசிச் செயற்றிட்டத்திற்கு இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகள் | LK-MOA- PMU-277608-GO-RFB | 300 | 540,000.00 | 7,500.00 |
| பதுளை மாவட்டத்தில் விதை உருளைக்கிழங்கு செயற்றிட்டத்திற்கு இயந்திரத்தினால் இயக்கப்படும் நீர்ப் பம்பிகள் | LK-MOA- PMU-277600-GO-RFB | 220 | 395,000.00 | 5,000.00 |
| முல்லைத்தீவு மாவட்டத்தின் வாழைப்பழம்/மிளகாய் செயற்றிட்டத்திற்கு இயந்திரத்தினால் இயங்கும் நீர்ப் பம்பிகள் | LK-MOA-PMU-277317-GO-RFB | 250 | 450,0000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்திலிருந்து 2022-08-18ஆம் திகதி முதல் 2022-09-07ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022-09-07ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு "வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு நீர்ப் பம்பிகளை வழங்குதல், விநியோகித்தல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2022-08-18.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6360(EL) | 25 Nos. Capacitors for the Yaskawa FS Drive Modules of the STS Cranes | 40,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6362(MP) | Hydraulic Pump for RAM Single Lift Spreaders at JCT | 10,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6366(EL) | 30 Nos. Access Points& Antennas | 95,000.00 | 1,000.00 | 15-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/10/054 | Lever Switches for the Cranes of JCT | 20,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/057 | Electrical Panel Board Type A (AS PER Drawing) | 25,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/056 | Motor Tyres 700X12, 12PLY | 120,000.00 | 3,500.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/20/055 | Bearings for Preventive Maintenance Fork Lift Trucks -14 | 50,000.00 | 1,000.00 | 08-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஆகஸ்ட் 19ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**






இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்றது. இந்திய தேசியக் கொடியினை ஏற்றிவைத்த உயர் ஸ்தானிகர், அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டார். அத்துடன் இந்திய ஜனாதிபதியின் சுதந்திர தினத்திற்கான செய்தியினையும் அவர் வாசித்தார்.

# பாக். பயங்கரவாதி ரவூப் அஸ்கரை தேடப்படும் நபராக அறிவிக்க பாதுகாப்பு சபைக்கு விண்ணப்பம்

இந்திய விமானத்தை 1999ம் ஆண்டு கடத்தியது, இந்திய பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியது, புல்வாமா குண்டு வெடிப்பு உட்பட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவராக ரவூப் அஸ்கரை இந்தியாவும் அமெரிக்காவும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளன.

பாதுகாப்பு சபையின் 1267வது கமிட்டி கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த விவரக் கோவையில் அமெரிக்க பத்திரிகையாளர் பேர்ள் டேனி கொல்லப்பட்ட சம்பவம், ஜம்முகாஷ்மீரில் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு, போதிய ஆதரமில்லை என சீனா எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும் ரவூப் அஸ்கரை பயங்கரவாத செயல்களுக்கு பொறுப்பாளியாக்கும் இம் முயற்சிக்கு பாதுகாப்பு சபையின் இறுதித் தீர்மானம் ஆதரவாக அமையும் என இந்தியத் தரப்பு கருதுகிறது.

ஜாயிஷ் ஈ மொஹமட் என்ற பயங்கரவாத அமைப்பின் தலைவரான மஸூத் அஸாரின் சகோதரரான ரவூப் அஸ்கர் இந்திய விமானத்தைக் கடத்தி இந்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த தன் சகோதரரை விடுவித்துக் கொண்டதாகவும், பாராளுமன்றத் தாக்குதலின் பின்னர் பெயர் குறிப்பிடப்படாத ஒளிவிடமொன்றுக்கு அஸார் பாகிஸ்தான் அரசினால் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்த விண்ணப்பத்தில் தகவல்கள் அடங்கியுள்ளன. இவ் விண்ணப்பம் பாதுகாப்பு சபையால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஐ.நா.வினால் தேடப்படும் பயங்கரவாதிகளாக ரவூப் அறிவிக்கப்படுவார்.

# சூழல் மாசை கட்டுப்படுத்தும் திட்டங்கள் இந்தியாவின் பத்து மாநிலங்களில்

சூழல் மாசு, காலநிலை மாறுபாடு காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளை எதிர்கொள்ளும் வகையில் இந்தியாவின் பத்து மாநிலங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.



இந்திய காலநிலை அவதான நிலையம், ஜப்பானிய அரசு, ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் உதவியுடன் பிஹார், டில்லி, குஜராத், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, சிக்கிம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

கார்பன் மாசு வெளிப்படுவதை முற்றாக நிறுத்துதல், காலநிலை மாற்றங்களை தாக்குப் பிடித்தல் என்பனவற்றில் இத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும் புவியியல் விஞ்ஞானம் மற்றும் புனர்பாவனைக்கான சக்தி அமைச்சுகள் இச்செயல்திட்டங்களில் உதவும் என்றும் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பசுமை சக்தி வளத்துக்கான கட்டமைப்புகளை ஏற்படுத்தல், போக்குவரத்து, சுகாதாரம், சிறு, நடுத்தர மற்றும் மிகச் சிறிய தொழில் முயற்சிகள் மற்றும் விவசாய பிரிவுகளில் குறைந்த சூழல் மாசு ஏற்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் 150 சுகாதார நிலையங்களுக்கு சூரிய சக்தி அளித்தல், மின்சார வாகனங்களுக்கு மின்சாரம் வழங்கும் 85 நிலையங்களை அமைத்தல், குளிர்பதன களஞ்சியங்களுக்கு சூரிய சக்தி வழங்கல் என்பன இத்திட்டத்தில் உள்ளடங்கும்.

# கொச்சின் கப்பல் கட்டும் தளத்தில் பசுமை கப்பல்கள் உருவாக்கப்படும்

## இந்திய மத்திய அமைச்சர் அறிவிப்பு



பசுமைக் கப்பல்களை உருவாக்குவதன் மூலம் கடல் வழிப் பயணங்கள் ஏற்படுத்தும் சூழல் மாசைக் குறைக்கும் நடவடிக்கைகளில் இந்தியா இறங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை கேரளா கொச்சின் துறைமுகத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் கலந்துகொண்ட இந்திய துறைமுக, கடல்வணிக மத்திய அமைச்சரான சர்பானந்த சொனாசால், ஹைட்ரஜனால் சக்தியூட்டப்பட்ட மின்வலு கப்பல்களை கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனம் உருவாக்கவுள்ளதாகவும் இந்திய அரசு இதில் பங்களிப்பு வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மின்வலுக் கப்பலை உருவாக்க 17.50 கோடி செலவாகும் என்றும் இதில் 75 சதவீதமான பங்கை இந்திய அரசு வழங்கும் என்றும் தெரிவித்துள்ள அமைச்சர், 2070ம் ஆண்டில் முழுமையான பசுமை இலக்கை அடையும் பாரதப் பிரதமரின் இலக்கையும், 2030ம் ஆண்டில் கடல்வழிப் பயணங்களில் 40 சதவீத கார்பன் பாவனைக் குறைப்பு என்ற கடல் வழித்துறைக்கான சர்வதேச அமைப்பின் இலக்கையும் அடையும் வகையில் இப் பசுமைக் கப்பல்கள் உருவாக்கப்படவுள்ளதாக மேலும் அவர் கூறினார்.

# கல்ஹின்னையில் வை. எம். எம். ஏ. பேரவையினால் இரத்ததான முகாம்



மாவத்தகம தினகரன் நிருபர்

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசத்தைக் கட்டி எழுப்புகின்ற செயற்திட்டத்தின் கீழ் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு கல்ஹின்னையில் இடம் பெற்றது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசத்தைக் கட்டி எழுப்புகின்ற செயற்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இரத்ததானம் வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு அல் மனார் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.

கல்ஹின்னை வை. எம். எம். ஏ. கிளையின் தலைவர் மபாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்வில் பூஜாப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் ரசான், ஊர்ப் பிரமுகர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம், சிங்கள இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கினர்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வடிகானுக்குள் வீழ்ந்து விபத்து

## மூவர் காயம்





தனியார் பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விழகி வடிகானுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கற்பிட்டி பகுதிக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பஸ்ஸே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ் விபத்து கற்பிட்டி பாலாவி பிரதான வீதியின் மாம்புரி பகுதியில் இடம்பெற்றுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை நுரைச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீனன்கோட்டை சாதனை வீரர்களுக்கு நகர பிதா மஸாஹிம் மொஹமட் தலைமையில் வரவேற்பு




பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் மாணவர்களான முகர்ரம் றிப்கான், அலிஹம்தான் இப்திகார், சஸான் ஷாக்கிர், பிராஸ் அஹமட் பர்ஹான் ஆகிய மாணவர்கள் பேருவளையிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு சுமார் 195 km தூரத்தை ஒரே நாளில் துவிச்சக்கர வண்டியில் பயணித்து சாதனை நிலைநாட்டியுள்ளனர். இவர்களின் இந்த முயற்சியை பாராட்டும் வகையில் பேருவளை நகர பிதா மஸாஹிம் மொஹமட்டினால் மேற்படி நான்கு மாணவர்களுக்கும் நேற்று (17) பேருவளை நகர சபை வளாகத்தில் மலர் மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வை நகர பிதாவின் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி (PRO) மொஹமட் அஷ்ரப் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பலாலி, யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையத்தில் வருகை மற்றும் புறப்படும் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் முக்கிய வகுதியான (Core Category) தீர்வை விலக்களிக்கப்பட்ட செயற்படுத்தலை நடாத்திச் செல்பவரொருவரை தெரிவு செய்வதற்கான தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**(Tender No.: 040/T/2022)**

மூன்று (03) வருட காலப்பகுதிக்கு பலாலி, யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தில் வருகை மற்றும் புறப்படும் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் முக்கிய வகுதியான தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைகளை நடாத்திச் செல்வதற்காக விமானநிலையங்கள்/ துறைமுகங்கள் முக்கிய வகையான சிறியளவிலான துறையில் செயற்படுத்தல்களின் சிறந்த மற்றும் சான்றழிக்கப்பட்ட அனுபவத்தையுடைய புகழ்வாய்ந்த சிறியளவிலான வியாபார நிறுவனங்கள், பதிவு பெற்ற கம்பனிகள், தாபனங்கள் அல்லது உரிமையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட செயற்படுத்துநர் தடைசெய்யப்பட்ட வருகை மற்றும் தடைசெய்யப்பட்ட புறப்படும் பிரதேசங்களில் ஒவ்வொரு கடை இடப்பரப்பொன்று ஒதுக்கப்படும்.

பலாலி, யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையத்தின் வருகை மற்றும் புறப்படும் தடைசெய்யப்பட்ட பிரதேசத்தில் அனுமதிக்கப்பட்ட தீர்வை விலக்களிக்கப்பட்ட முக்கிய வகுதியான பொருட்கள் பின்வருமாறு:

(அ) அனைத்து வகையான மதுபானங்கள் (வைன், பியர்கள் மற்றும் ஸ்பிரிட்டுக்கள் அடங்கலானவை)
(ஆ) வாசனைப் பொருட்கள்
(இ) ஒப்பனைப் பொருட்கள் / கழிவறை வாசனைப் பொருட்கள்.
(ஈ) இனிப்புப்பண்டங்கள்
(உ) புகையிலைப் பொருட்கள் (சிகரெட், சுருட்டு மற்றும் பைப் புகையிலை அடங்கலானவைகள்)

**குறிப்பு:** வருகை முனையத்தில் புகையிலைப் பொருட்களின் விற்பனை மற்றும் காட்சிப்படுத்தல் ஆகியன சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ளன.

ஏற்புடையதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 2022 செப்டம்பர் 12 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் விலைமனுதாரரின் கம்பனிதலைப்புக் கடிதத்தில் விண்ணப்பமொன்றுடன் ரொக்கப் பணத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்க அறையிலுள்ள வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படலாம். ஒன்லைன் வழியாக 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர் **www.airport** என்ற வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் இணையதளத்திலிருந்தும் விலைமனுக்கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யலாம். கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வர்த்தக மற்றும் ஆதனங்களின் தலைவரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணமானது இலவசமாக பரீட்சிப்பதற்கு வைக்கப்படும்.

விலைமனுக்கள் கம்பனியினால் வழங்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களில் மட்டுமே தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் புகழ் வாய்ந்த வர்த்தக வங்கியொன்றினால் அல்லது உரிமமுடைய விஷேடத்துவமுடைய வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 150 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் 75,000 ரூபா ரொக்கப் பணத்தில் அல்லது 205 அ.ஐ.டொலருக்கு சமமான பெறுமதியுடைய வங்கி வரைவொன்றுடன் அல்லது விலைமனுபிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2022 செப்டம்பர் 2 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு அமைவிடத்தில் (யாழ்ப்பாணம்) விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றும் அதனைத் தொடர்ந்து தள விஜயமொன்றும் நடாத்தப்படும். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். 2022 செப்டம்பர் 14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகளின் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் பகிரங்கமாகவே வாசிக்கப்படும். விலைமனுக்களின் நிர்ணயிக்கப்பட்ட மூடும் நேரத்தின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் எந்தவொரு விலைமனுக்களும் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்கள் 011-2264000, 011-2264002 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக அல்லது **headcp@airport.lk** என்ற மின்னஞ்சலினூடாகவும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனைய கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் 37 ஆம் இலக்க அறையிலுள்ள வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவிலிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# அபுதாபி நைட் ரைடஸில் 3 இலங்கை வீரர்கள்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள சர்வதேச லீக் டி20 தொடருக்கான அபுதாபி நைட் ரைடர்ஸ் குழாத்தில் இலங்கை வீரர்கள் மூவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார, துடுப்பாட்ட வீரர் சரித் அசலங்க மற்றும் அனுபவ சகலதுறை வீரர் சீக்குகே பிரசன்ன ஆகியோரே இவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை அணியுடன் 14 வெளிநாட்டு வீரர்கள் ஒப்பந்தமாகி இருப்பதோடு அதில் மேற்கிந்திய தீவுகளின் அன்ட்ரே ரசல், சுனில் நரேன், இங்கிலாந்தின் ஜோனி பெயாஸ்டோ மற்றும் அயர்லாந்தின் போல் ஸ்டார்லினும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தத் தொடர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளதுடன், 34 போட்டிகள் கொண்ட தொடராக இந்த தொடர் அமையவுள்ளது. போட்டிகள் அனைத்தும் டுபாய், ஷார்ஜா மற்றும் அபுதாபியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியின் எதிர்கால போட்டி அட்டவணை வெளியீடு



டெஸ்ட் விளையாடும் அனைத்து நாடுகளினதும் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான எதிர்கால போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் வெளியிட்டுள்ளது.

இதன்படி இலங்கை அணி எதிர்வரும் 2023 தொடக்கம் 2026 வரை 24 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே விளையாடவிருப்பதோடு, குறைந்தது 48 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 51 டி20 சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

இதில் இலங்கை 2026 இல் உலகக் கிண்ண டி20 போட்டியை நடத்தவுள்ளது. 2027இல் தென்னாபிரிக்கா, சிம்பாப்வே மற்றும் நமிபியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி வரை எதிர்கால போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

12 முழு அங்கத்துவ நாடுகளும் 2023–27 காலப்பகுதியில் மொத்தமாக 777 சர்வதேச போட்டிகளில் விளையாடவுள்ளன. இதில் 173 டெஸ்ட், 281 ஒருநாள் மற்றும் 323 டி20 போட்டிகள் அடங்கும். தற்போதைய எதிர்கால போட்டி அட்டவணையில் மொத்தம் 694 போட்டிகளே உள்ளடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கரீபியன் பிரீமியர் லீக்கில் சமரி அதபத்துவின் பெயர்



மேற்கிந்திய தீவுகளில் முதன்முறையாக நடைபெறவுள்ள மகளிருக்கான கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் இலங்கை அணித்தலைவி சமரி அதபத்து விளையாடவுள்ளார்.

கரீபியன் பிரீமியர் லீக் தொடர் ஒகஸ்ட் 24ஆம் திகதி முதல் செப்டம்பர் 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதில் சமரி அதபத்து, ஸ்டெப்பினி டெய்லர் தலைமையிலான கயானா அமேஷன் வொரியர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இலங்கை மகளிர் கிரிக்கெட்டில் வெளிநாட்டு லீக் தொடர்களில் சமரி அதபத்து, உதேசிகா பிரபோதனி மற்றும் சஷிகலா ஶ்ரீவர்தன ஆகியோர் மாத்திரமே விளையாடியுள்ளனர்.

இதில் சமரி அதபத்து மாத்திரமே கியா சுபர் லீக், மகளிர் பிக்பேஷ் லீக், மகளிர் ஐ.பி.எல். மற்றும் பையர்பிரேக் அழைப்பு போன்ற பல்வேறு வெளிநாட்டு தொடர்களில் விளையாடியுள்ளார்.

44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :..................................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை :..................................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை :..................................

வாக்களித்தவர் பெயர் :..................................

முகவரி :..................................

மொபைல் இல. :..................................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 20-08-2022 இல. 21




# அசித வன்னிநாயக்கவின் அரைச்சதத்தால் இலங்கை இளையோர் வலுவான நிலையில்



இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி, இங்கிலாந்தின் யங் லயன்ஸ் அழைப்பு பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் அசித வன்னிநாயக்கவின் அரைச்சதத்தோடு வலுவான நிலையில் உள்ளது.

லோக்போரோக் ப்ரோகிங்டன் அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை (16) ஆரம்பமான இந்தப் பயிற்சிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை இளையோர் அணி சதீஷ ராஜபக்ஷ சிறந்த ஆரம்பத்தினை பெற்ற போதும் தனது ஓட்டங்களை அதிகாரிக்கத் தவறிவிட்டார். அவரால் 23 ஓட்டங்களையே பெற முடிந்தது.

இதன் பின்னர் புதிதாக களம் வந்த துடுப்பாட்ட வீரர்களில் செவோன் டேனியல் வெறும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பவன் பதிராஜ (23) மற்றும் ரனுத சோமரட்ன (29) ஆகியோரும் பெரிதாக சோபிக்கவில்லை. இந்நிலையில் போட்டியில் மழையின் குறுக்கீடும் ஏற்பட்டிருந்தது. மழையின் பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் தான் பெற்றுக் கொண்ட அரைச்சதத்துடன் அசித வன்னிநாயக்க இலங்கை இளையோர் அணிக்கு பலம் சேர்க்க மீண்டும் மழை குறுக்கிட்டு முதல் நாள் ஆட்டம் ஒத்திவைக்கப்பட்ட போது, இலங்கை 19 வயது அணி வீரர்கள் 56 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்கள் பெற்றிருந்தனர். களத்தில் ஆட்டமிழக்காது இருந்த அசித வன்னிநாயக்க 81 ஓட்டங்களை எடுத்ததோடு, ஆட்டமிழக்காமல் இருக்கும் ஏனைய வீரரான ரவீன் டி சில்வா 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

## சர்வதேச செய்திகள்

# பிரிட்டனில் பணவீக்கம் புதிய உச்சம்



பிரிட்டனில் கடந்த மாதம் பணவீக்கம் 40 ஆண்டுகள் இல்லாத அளவு புதிய உச்சத்தை தொட்டு உணவு விலைகள் அதிகரித்திருப்பதாக நேற்று வெளியான (17) உத்தியோகபூர்வ தரவுகள் காட்டுகின்றன.

ஜ்லை மாதத்தில் வருடாந்த நுகர்வோர் விலை பணவீக்கம் 10.1 வீதத்தை தொட்டிருப்பதாக தேசிய புள்ளிவிபரத்துக்கான அலுவலகம் வெளியிட்ட தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஜ்ன் மாதத்தில் 9.4 வீதமாக இருந்தது.

2021 ஜ்லை தொடக்கம் உணவு விலைகளின் அதிகரிப்பு 12.7 வீதம் வரை உயர்ந்துள்ளது.

இதில் ரொட்டி மற்றும் தானியங்களின் விலை உச்சத்தைத் தொட்டிருப்பதோடு அதற்கு அடுத்த இடத்தில் பால், சீஸ் மற்றும் முட்டை விலை உள்ளது.

# இரண்டு ஏவுகணைகளை பாய்ச்சியது வட கொரியா



வட கொரியா தனது மேற்குக் கடற்கரைக்கு அப்பால் 2 ஏவுகணைகளைப் பாய்ச்சியுள்ளது. ஒன்சொன் நகரிலிருந்து அவை ஏவப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

தென் கொரிய இராணுவத்தின் உயர் அதிகாரியை மேற்கோள்காட்டி யொன்ஹப் செய்தி நிறுவனம் இதனைத் தெரிவித்தது. பியோங்யாங் கடந்த இரண்டு மாதங்களில் ஏவுகணைச் சோதனை எதனையும் நடத்தவில்லை.

கடந்த சில மாதங்களாகக் கொவிட்–19 நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் அது கவனம் செலுத்தியது.

நீண்ட காலமாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் போர் ஒத்திகைக்கான தயார்படுத்தலாக நான்கு நாள் பூர்வாங்க கூட்டு போர் ஒத்திகை ஒன்றை தென் கொரியா மற்றும் அமெரிக்க ஆரம்பித்து அடுத்த தினத்திலேயே இந்த ஏவுகணை சோதனைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பணயக்கைதி விவகாரத்தில் லெபனான் ஆடவர் விடுதலை



தனது வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை பெறுவதை அனுமதிக்கக் கோரி கடந்த வாரம் பெய்ரூட் வங்கி ஒன்றின் ஊழியர்களை பணயக்கைதியாக பிடித்த ஆடவரை விடுவிக்கும்படி லெபனான் நீதிபதி ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

தனது மருத்துவச் செலவுக்குத் தேவையான 35,000 டொலர்களை தனது வங்கிக் கணக்கில் இருந்து பெறுவதற்கு வங்கி இணங்கியதை அடுத்து பசம் அல் ஷெய்க் ஹுசைன் என்ற அந்த ஆடவர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

அவர் மீதான குற்றச்சாட்டை வங்கி கைவிட்டதை அடுத்தே நீதிபதி அவரை விடுவித்துள்ளார்.

லெபனானில் பொருளாதார நெருக்கடியால் வங்கிகள் கடும் கட்டுப்பாடுகளை செயற்படுத்திவரும் நிலையில் இந்த ஆடவரின் செயலுக்கு பொதுமக்களிடை வரவேற்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் கடும் அனல்காற்று: கூடுதல் நிவாரண நடவடிக்கை



சீனா அனல்காற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

வழக்கத்துக்கு மாறான அதிக வெப்பநிலையும் நீடித்த வரட்சியும் நாட்டின் பல வட்டாரங்களைப் பாதித்துள்ளன. விளைச்சல் குறைந்துள்ளது. குடிநீர் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

சொங்சிங் நகருக்கு அதிகாரிகள் தண்ணீர்த் தொட்டிகளை அனுப்பியுள்ளனர். ஹுபே மாநிலத்தில் நீர்ப்பாசனத்துக்காக அதிக அளவு தண்ணீரையும் அவர்கள் திறந்துவிட்டுள்ளனர். பேரிடர் நிவாரண நிதிக்காக சீனா 30 மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளது.

சீசுவான் மாநிலத்தில் மின்சார விநியோகத்துக்கு அனல்காற்று இடையூறாக உள்ளது. ஆங்காங்கே நீர்மின்சார உற்பத்தியில் பிரச்சினை ஏற்படுவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

மின்சாரத் தட்டுப்பாட்டைத் தணிப்பதற்கு அந்த வட்டாரத்தில் உள்ள அனைத்துத் தொழிற்சாலைகளையும் ஆறு நாட்களுக்கு மூடுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒகஸ்ட் மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.